# வணிகவியலாளன்

இதழ் 1



வெளியீடு

வணிக மாணவர் மன்றம்

கிளி முருகானந்த ம.வி

முரசுமோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிகவியலாளன்

## இதழ் - 1

வெளியீடு

வணிகமன்றம்

கிளி/முருகானந்த மகாவித்தியாலயம்

முரசுமோட்டை

பரந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வணிகவியலாளன்** - வணிக மலர்

இதழ் 1

**வெளியீடு** - வணிக மன்றம்

கிளி / முருகானந்த ம.வி

**ஆண்டு** - 2011

**பக்கம்** - 70

**அட்டை வடிவமைப்பு, நூல் வடிவமைப்பு**

திரு வ.வித்தியாபரன் **B.FA(Hons), M.A**

ஆசிரியர்

கிளி / முருகானந்த ம.வி

**அச்சுப்பதிப்பு**

நியூ கோல்டன் ஸ்ரார்

திருநெல்வேலி

**நூல் ஆலோசனைக்குழு**

திரு.க.மகிந்தன் **B.A(Hons) Eco spe,Dip inEdu**

ஆசிரியர்

கிளி / முருகானந்த ம.வி

திரு.ஸ்ரீ.சுதாகரன் **B.Com, Acc spe**

ஆசிரியர்

கிளி / முருகானந்த ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வணிக மன்றம் –2011

| | |
|---|---|
| போஷகர் | - திரு. தி.வரதன் - அதிபர் |
| பொறுப்பாசிரியர் | - திருமதி. கோ.சிறிதரன் - ஆசிரியர் |
| தலைவர் | - செல்வன் க.சிவலக்ஷன் |
| செயலாளர் | - செல்வி ச.சங்கீதா |
| பொருளாளர் | - செல்வன். த.கீதன் |
| இதழாசிரியர் | - செல்வன். த.லக்ஷன் |
| உறுப்பினர்கள் | - செல்வி தி.தெய்வகௌரி |
| | - செல்வி. சு.சோபிகா |
| | - செல்வி.வீ.டிசாளினி |
| | - செல்வி. செ.லக்சனா |
| | - செல்வி. லோ.லோஜினா |
| | - வெல்வன். ம.பிரவிந் |
| | - செல்வன். ர.தக்ஷயன் |
| | - செல்வன். தெ.கஜன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது பாடசாலையின் வணிக மன்றத்தினது கன்னி முயற்சியாக பல்வேறு ஆக்கங்களைத் தாங்கி வரும் 'வணிகவியலாளன்' என்னும் சஞ்சிகை மலர்ந்துள்ளது. இன்று வணிகத்துறையானது ஏனைய துறைகளுடன் ஒப்பிடுகையில் முதன்மை வாய்ந்த ஒருதுறையாக மிளிர்கிறது. இன்று வணிகச் செயற்பாடுகள் தகவல் தொழில்நுட்பத்துடன் பின்னிப்பிணைந்து வியாபித்து நிற்கின்றன. The Sky is Limit of Business என்று கூறுமளவிற்கு வணிகமானது வானளாவிய வளர்ச்சியை நோக்கி வீறு நடை போட்டு வருகிறது. இத்தகைய வணிகச் செயற்பாடுகள் நாளை வேற்றுக் கிரகங்கள் வரையும் கூடச் செல்லலாம். வர்த்தக உலகில் மாணவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்து முன்னேறுவதற்கு முயற்சியடைய வேண்டும் எமது பாடசாலை மாணவர்களின் பல்வேறு ஆக்கங்களைச் சுமந்துள்ள இச் சஞ்சிகைக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

வணிகப் பிரிவு மாணவர்களது ஆக்கங்களைத் தாங்கி வரும் இச் சஞ்சிகையானது, ஏனைய மாணவர்களுக்கும் பயனுடையதாய் அமைவதோடு, எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு மேலும் மெருகூட்டுகிறது. இவ்வாறான உயிரோட்டமான செயற்பாடுகள் இத்தோடு நின்று விடாது இனிவரும் காலங்களிலும் துடிப்புடன் துலங்க வேண்டும். எனவே இச் சஞ்சிகை உதயமாவதற்கு உதவிய மாணவர்களையும், ஆசிரியர்களையும் பாராட்டுவதோடு, தற்போது அரும்பாக முளைத்திருக்கின்ற வர்த்தக மன்றமானது காலப்போக்கில் துளிர்விட்டு கிளைபரப்பி பெரு விருட்சமாய் வளரவேண்டும் என வாழ்த்துவதில் பெருமை அடைகிறேன்.

திரு.தி.வரதன்
அதிபர்
கிளி/முருகானந்த ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்பாசிரியரின் ஆசிச்செய்தி

கிளி/முருகானந்தா மகாவித்தியாலயத்தில் முதன் முதலில் வணிக சஞ்சிகை ஒன்று வெளிவருவம் ஆக்கபூர்வமான நல் முயற்சியாகும். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இன்னல்களுக்கும் அந்த யுத்த தன்மைகளினுள் இருந்து விரைவில் மீண்டு இவ்வாறான ஆக்க முயற்சிகளில் மாணவர் ஈடுபடுவது என்பது அவர்களுடைய ஆளுமை வளர்ச்சியைக் கட்டியழுப்புவதற்கு உறுதுணையாக நிற்கும் என்பதில் ஐயமில்லை. கிளிநொச்சி கோட்டம் மற்றும் மாவட்ட அடிப்படையில் இந்த ஆண்டில் நடைபெறும் முதல் முயற்சி இதுவென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் கற்றல் நடவடிக்கைகளில் மாணவருக்கு தூண்டுகோலாகவும் மாணவரின் ஆக்கத்திறன் முயற்சிக்கு உறுதுணையாக நிற்பதற்கு இத்தகைய சஞ்சிகைகள் தொடர்ந்தும் வெளிவர வேண்டும். இச்சஞ்சிகை என்றும் கல்வியுலகில் உவந்தேத்தும் சஞ்சிகையாக சிறப்பு பெற வாழ்த்துகிறேன். பயன்மிகு இச் சஞ்சிகையை கொண்டு வந்த கல்வி சமூகத்துக்கும் எல்லையில்லாத என் அன்பினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறீதரன் கோமதி
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


♠ வறிய மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு கைகொடுக்கும்
♠ சனச வங்கி
♠ இலங்கை நிதி அறிக்கையில் நியமங்களின் அறிமுகம்
♠ படியுங்கள்! தெரியுங்கள்!
♠ இலங்கையில் உள்ள தொழிற்சாலைகள்
♠ பொருளியல் என்றால் என்ன என்பது பற்றிய வரைவிலக்கணங்கள் சில..
♠ தமிழ்
♠ பொன்மொழிகள்
♠ அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள்
♠ பொது அறிவு
♠ கண்கண்ட கல்வித் தெய்வங்கள்
♠ உலகமயமாக்கல்
♠ நற்பரிசு
♠ மனிதன் உயிரிழந்த பின்பு உறுப்புக்கள் செயலிழக்கும் நேரம்
♠ சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தினங்கள்
♠ வாழ்க்கை
♠ பொது அறிவு
♠ விலங்கு விநோதங்கள்
♠ குசநைனௌானி
♠ போதையற்ற நாளைய உலகு
♠ நாடுகளும் நாணயங்களும்
♠ கணக்கீட்டு நியமம் - 18
♠ முகாமைத்துவத்தில் மனிதவளம்
♠ தன்னியக்க ரெலர் இயந்திரம்
♠ கவிதை
♠ கூலிக்கிரயம்
♠ சர்வதேச நாணய நிதியம் பற்றிய ஒரு நோக்கு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறிய மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு கைகொடுக்கும் சனச வங்கி

வறிய மக்களுக்கு அவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு கை கொடுக்கும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட சனச வங்கி. எம் நாட்டு வறிய மக்களுக்கு துணையாளியாக இருந்து வருகின்றது. குறிப்பாக கிராமத்து மக்களை வறுமைக்கோட்டில் இருந்து உயர்த்தும் நோக்கில் செயற்பட்டு வரும் சனச வங்கி 1997 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். முற்று முழுதாக மக்கள் உடைமையான சனச வங்கி மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட ஒரு விசேட வங்கியாகும்.

இவ் வங்கி கடந்த 13 வருட காலத்தில் சுமார் 600,000 வாடிக்கையாளர்களைத் தம் வசப்படுத்தியுள்ள இவ் வங்கி கடந்த காலத்தில் தனது சேவையை கிழக்கு நோக்கி விஸ்தரித்து பாரிய சேவையை வழங்கியதைப் போல் தற்போது தனது சேவையை வடக்கிற்கு விஸ்தரித்துள்ளது.

நாட்டின் 3 தசாப்தகாலமாக நிலவிய யுத்தம் முடிவுக்கு வந்துள்ள இச்சந்தர்ப்பத்தில் அப் பிரதேசங்களுக்கான அபிவிருத்தி பணிகள் பாரிய வேகத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இச் சந்தர்ப்பத்தில் வங்கி என்ற ரீதியில் கிழக்கு மாகாணத்தில் தமது கிளைகளைத் திறந்ததோடு அவை நகரங்களை மையப்படுத்தியதாக இருந்தமையினால் அங்கு பார்த்த ஒருவிடயம் கிராமத்தவர்கள் சேவையை இலகுவாக பெற்றுக்கொள்கின்றனர். இதே போன்ற திட்டத்தையே தற்போது வடக்கை நோக்கி விஸ்தரித்துள்ளது. இவ்வங்கி ஆனது வடக்கில் உள்ள மக்களின் உடைய தேவைகளையும், அபிவிருத்தி பணிகளையும் பொறுப்புடன் மேற்கொண்டு வருகின்றது. அத்தோடு மக்களின் சேமிப்பு நலன் கருதி பல திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கி என்ற ரீதியில் வருமானத்தை மாத்திரம் இலகுவாகக் கொண்டிராமல் அபிவிருத்தியையும் மையமாக கொண்டு செயலாற்றி வருகின்றது. கிழக்கைப் போன்றே வடக்கில் நானாட்டான், கிளிநொச்சி போன்ற பிரதேசங்களில் தமது 3 கிளைகளைத் திறந்துள்ளது. அத்தோடு சேர்ந்து வடக்கு மாகாணத்தில் 4 கிளைகளை ஸ்தாபித்துள்ளது.

இந்த வங்கி கிளைகளுடன் இணைந்ததாக மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் தமது சேவை நிலையங்களை திறந்துள்ளது. இதற்கு மற்றுமொரு காரணம் சனச வங்கியானது என்றும் மக்களோடு உள்ள வங்கி இதனால் எப்போதும் தமது வாடிக்கையாளர்களின் அருகில் சென்று சேவையாற்றவே விரும்புகின்றது. அத்தோடு அங்கு உள்ளவர்களுக்கு இதன் வாயிலாக வேலை வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது. அவ்வாறாயினும் இந்தக் வங்கிக் கிளைகளுக்கு அவ்வவ் பிரதேசங்களை சார்ந்தவர்களை வேலைக்கு அமர்த்துகின்றது.

இது தமது கிளைகளை மார்ச் மாதத்தில் ஆரம்பித்தமைக்கான பிரதான காரணம் மாாச் 08 ம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட சர்வதேச மகளிா தினமே காரணமாகும். வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் காரணமாக பல பெண்கள் தமது கணவரை இழந்து நிர்க்கதியான நிலையில் இருக்கின்றனர். இவர்கள் தமது சாயமுயற்சியால் வாழ்க்கையில் முன்னேற விரும்புகின்றார்கள். எனவே இது அவர்களின் சுயமுயற்சிக்கு கைகொடுத்து அவர்களுக்கான கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த வகையில் இவ் வங்கி அறிமுகப்படுத்தி உள்ள 'உத்தமி' கணக்கு வறிய மக்களுக்கு பெரும் பயனளிக்கின்றது.

இத்தகைய சனச வங்கி ஆனது வறிய மக்களின் நலன்கருதி பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. இவ்வங்கி தாழ்ந்தோரை உயர்த்தும் நோக்கில் செயற்பட்டு வருகின்றது. இவ்வங்கியானது தனது திட்டங்களை திறமையாக செயற்படுத்த எம்மாலான ஒத்துழைப்பை வழங்குவோம்.

T.யாகினி
12 Arts



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை நிதி அறிக்கையில் நியமங்களின் அறிமுகம்

### கணக்கீட்டு நியமம்

எல்லா நிறுவனத்தாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் ஓர் சட்ட அதிகாரம் உள்ள கணக்கீட்டு நிறுவனத்தினால் வெளியிடப்படும் பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள் கணக்கீட்டு நியமங்களாகும்.

eg:- சர்வதேச கணக்கீட்டு நியமம் (international Accounting Standard) – IAS

சர்வதேச நிதி அறிக்கையிடும் நியமங்கள் (International Financial Reporting

Standards – IFRS

அமெரிக்கன் கணக்கீட்டு நியமம் (American Accounting

Standard – AAS

### இலங்கை கணக்கீட்டு நியமங்களின் மாற்றங்கள்

இலங்கைக் கணக்கீட்டு நியமம் பின்வரும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1. இலங்கை கணக்கீட்டு நியமங்கள்
   Sri Lanka Accounting Standards (IKAS)
2. இலங்கை நிதி அறிக்கையிடும் நியமங்கள்
   Sri Lanka Financial Reporting Standards (SLFRS)

### இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கையிலுள்ள ஒரே தன்மையான நிறுவனங்கள் ஒரே கொள்கையைப் பின்பற்றி கணக்கீட்டை மேற்கொள்ள இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தின் நியமக் குழுவினால் வெளியிடப்படும் கொள்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களாகும்.

இந் நியமங்கள் 2012.01.01 இலிருந்து நடைமுறைக்கு வருகின்றது. இதுவரை SLAS பின்பற்றப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை நிதி அறிக்கையிடும் நியமங்கள்

இலங்கையிலுள்ள ஒரே தன்மையிலான நிறுவனங்கள் ஒரே கொள்கையைப் பின்பற்றி கணக்கீட்டை மேற்கொண்டு அதைச் சர்வதேசத்திலுள்ள அதையொத்த நிறுவனத்துடன் ஒப்பீடு செய்வதற்காக இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறவனத்தின் நியமக் குழுவால் வெளியிடப்படும் கொள்கைகள் இலங்கை நிதி அறிக்கையிடும் நியமங்களாகும்.

இந் நியமங்கள் 2012.01.01 இலிருந்து நடைமுறைக்கு வருகின்றது. அதுவரை இலங்கை கணக்கீட்டு நியமம் (SLAS) பின்பற்றப்படும்.

### இலங்கை நிதி அறிக்கையில் நியமங்கள் உருவாக்கப்பட்டதற்கான காரணங்கள்

உலகமயமாக்கலின் விளைவால் நிதி அறிக்கைகளை அனைவரும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையிலான ஓர் கணக்கீட்டு மொழியின் தேவை இலங்கையிலும் உருவானது. அதை நிவர்த்தி செய்வதற்காகவே சர்வதேச நிதி அறிக்கையிடும் நியமங்களையும் உள்வாங்கி இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தின் நியமக் குழுவால் இந் நியமங்கள் உருவாக்கப்பட்டன.

### இலங்கை நிதி அறிக்கையிடும் நியமத்தின் அறிமுகத்தினால் ஏற்படக்கூடிய சில தாக்கங்கள்

* வணிக செயற்றிட்டங்களில் மாற்றம் கொண்டுவர வேண்டிய தேவை.
* புதிதாக ஏற்படப்போகும் தேவைகளுக்காக நிறுவனம் ஆயத்தமாக இருக்க வேண்டிய நிலை.
* இலங்கை நிதி அறிக்கையிடும் நியமத்தின்படி 2010, 2011 நிதியாண்டிற்கான ஐந்தொகைகளை மீண்டும் தயாரிக்க வேண்டிய நிலை.
* கண்ணிமைக்கும் நேரத்தில் இம் மாற்றம் கொண்டுவரப்படுவதால் நிறுவனங்களுக்குப் பாரிய நடைமுறைச் சிக்கல் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2012 ஜனவரி 01 முதல் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

1. SLFRS 1 - சர்வதேச நிதி அறிக்கையிடலை முதற்தடவையாக பிரயோகித்தல்

   IFRS 1 - First time adoption of International Financial Reporting.

2. LKAS 1 - நிதிக் கூற்றுக்களைச் சமுகப்படுத்தல்.

   IAS 1 - Presentation of financial statements.

3. LKAS 2 - இருப்புக்கள்

   IAS 2 - Inventories

4. LKAS 7 - காசுப் பாய்ச்சற் கூறுகள்

   IAS 7 - Statement of Cash flows

5. LKAS 8 -கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்.

   IAS 8 - Accounting Policies, Changes in Accounting Estimates and Errors.

6. LKAS 10 - அறிக்கையிடும் காலத்திற்குப் பின்னைய நிகழ்வுகள்

   IAS 10 - Events after the Reporting Period.

7. LKAS 16 - ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

   IAS 16 - Property, Plant and Equipment

8. LKAS 17 - குத்தகைகள்

   IAS 17 - Leases

9. LKAS 18 - வருமானம்

   IAS 18 - Revenue

10. LKAS 37 - ஏற்பாடுகள், நிகழ்தகு பரிப்புக்கள் மற்றும் நிகழ்தகு சொத்துக்கள்.

    IAS 37 - Provisions, Contigent Liabilities and Contingent Assets

11. LKAS 38 - அருவச் சொத்துக்கள்

    IAS 38 - Intangible Assets

12. LKAS 40 - முதலீட்டு ஆதனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IAS 40 - Investment Property

13. LKAS 41 - விவசாயம்

IAS 41 - Agriculture

14. LKAS 36 - சொத்துக்கள் வலிமையிழத்தல்

IAS 36 - Impairment of Assets.

15. LKAS 34 - இடைக்கால நிதி அறிக்கை

IAS 34 - Interim Financial Reporting

A.Princiya.
A/L 2012 com
KN/Murukanantha M.V

## படியுங்கள்! தெரியுங்கள்!

1. அச்சு இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் - ஜே.குட்டென்பேர்க்
2. உலக வானிலை அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு - 1950 (ஜெனிவா)
3. மரியானா ஆழியின் நீளம் - 11880km
4. அதிக மழை பெய்யும் இடம் - சீறாப்பூஞ்சி (இந்தியா)
5. மனிதனின் தலையில் உள்ள எலும்புகளின் எண்ணிக்கை - 22
6. ஹிட்லருடைய படையின் பெயர் - நாசிப்படை
7. எறும்பின் உடம்பில் காணப்படும் அமிலத்தின் பெயர் - போமிக் அமிலம்
8. மிக வேகமாக ஓடும் விலங்கின் பெயர் - சீட்டால்
9. உலகின் அதிகளவு மக்களால் பேசப்படும் மொழி - மண்டாரிக் (சீனா)
10. உலகில் மிகச்சிறிய தேசிய கீதத்தை கொண்ட நா்டு - ஜப்பான் (நான்கு வரிகள்)
11. உலகில் மிகப்பெரிய தேசிய கீதத்தை கொண்ட நாடு- கிரேக்கம் (120 வரிகள்)
12. ஐக்கிய நாடுகள் நிறுவனம் தொடங்கிய ஆண்டு - 1945.12.26
13. சர்வதேச நீதிமன்றம் இயங்கும் இடம் - தஷேக் நகரம் (நெதர்லாந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. காலைப் பிடித்து தூக்கினால் இறக்கும் பறவை - வாத்து
15. சீன நாட்டின் தாய்மொழி - டென்டலின்
16. தமிழ் சுருக்கெழுத்து முறையை கண்டுபிடித்தவர் - ராம் சாகிப் சீனிவாசராங்
17. நியூசிலாந்தின் தேசிய பறவை - கிவி
18. இந்தியாவின் தேசிய கீதத்தை இயற்றியவர் - இரவீந்திரநாத் தாகூர்
19. இலங்கையில் விளையாட தடை செய்யப்பட்டுள்ள - போலோ விளையாட்டு
20. "ஸ்குயிங்" என்னும் பனிசறுக்கு விளையாட்டின் தாயகம்- பின்லாந்து
21. ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம் - கிரேக்கம்
22. உலகிலே மிகப்பெரிய பறவை உயரம் - நெருப்புக்கோழி 9 அடி
(சராசரி மனிதனின் உயரத்தை விட அதிகம்)
23. இக் கோழியின் எடை - 156.5 கிலோ கிராம்
24. உலக அழகுப் போட்டி முதன்முதல் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு - 1855 அமெரிக்கா
25. மனிதனின் சிந்தனை வேகம் மணிக்கு - 270 கிலோமீற்றர்.
26. நமது இரத்தத்தில் நிறமில்லாமல் காணப்படும் திரவம்- பிளாஸ்மா
27. அழும் சுவர் உள்ள நகரம் - ஜெருசலேம்
28. இந்தியாவின் உணவுச்சாலை என அழைக்கப்படும் மாநிலம் - பஞ்சாப்
29. சாக்லேட் தொழிற்சாலை முதன்முதலில் எங்கு ஜேர்மனியில் தொடங்கப்பட்டது - 1756ம் ஆண்டு (பெர்லின் நகரில்)
30. உலகிலே மிகப் பெரிய ஜனநாயக நாடு - இந்தியா
31. உலகக் கோப்பை கால்பந்துப் போட்டி எங்கே எப்போது தொடங்கப்பட்டது, யாரால் -1930, பிரெஞ்நாட்டில் - இல்லிமெட்
32. இந்தியாவில் முதலில் பெண்களைப் படிக்க அனுமதி அளித்த மருத்துவக் கல்லூரி -சென்னை மருத்துவக் கல்லூரி
33. உலகிலே மிகப் பெரிய நூலகம் எங்கு உள்ளது - வாஷிங்டன் நகரில்
34. உலகின் மாபெரும் கப்பல் - ஒயாசிஸ் சூப்திசிஸ்
35. 2016ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ள நாடு - பிறேசில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. மீனைத் தெய்வமாக கருதும் நாடு - திபெத்
37. கணித சூத்திரத்தால் கண்டுபிடிக்கப்பட்ட கோள் - நெப்டியூன்
38. மகளிர்க்கென காற்பந்து ஒலிம்பிக்கில் சேர்க்கப்பட்டது- 1996
39. அணுவாயுத தகர்ப்பிற்கு முற்பட்ட அமெரிக்கவிஞ்ஞானி- ஹான்ஸ் பெத்தே
40. தண்ணீர் இல்லாத கோள் - வெள்ளி
41. ஆடி மாதம் முழுவதும் சூரிய ஒளி வெளிச்சமுள்ள நாடு - ஐஸ்லாந்து
42. எலும்புகள் அதிகமுள்ள பகுதி - கை
43. துர்மணம் வீசும் மலர் - ஏ.்.ப்லேசியா
44. கல்போன்று காட்சியளிக்கும் தாவரம் - லித்தொப்ஸ்
45. தசைகளின் மொத்த எண்ணிக்கை - 634
46. மனித உடலின் மிகப் பெரிய உறுப்பு - கல்லீரல்
47. தென்னிந்தியாவின் நுழைவாயில் என அழைக்கப்படும் நகரம் - சென்னை
48. இரத்தச் சுற்றோட்டத்தை முதன்முதலில் கண்டுபிடித்தவர் - வில்லியம் ஹார்வே
49. மனிதன் ஒரு அரசியல் மிருகம் எனக் கூறியவர் - அரிஸ்ரோட்டிஸ்
50. புற்றுநோயைக் கண்டுபிடித்தவர் -ரொபேர்ட் வெய்ன்பெரி

## இலங்கையில் உள்ள தொழிற்சாலைகள்

1. கடதாசித் தொழிற்சாலை - எம்பிலிப்பிட்டிய, வாழைச்சேனை
2. சீனித்தொழிற்சாலை - கந்தளாய், ஹிங்குரான
3. சீமெந்து தொழிற்சாலை - புத்தளம், காலி, காங்கேசன்துறை
4. கண்ணாடித் தொழிற்சாலை - நாத்தாண்டியா
5. உப்பளம் - புத்தளம், ஆணையிறவு, அம்பாந்தோட்டை
6. கட்டிப்பால் தொழிற்சாலை - பொலநறுவை
7. புடவை ஆலைகள் - வியாங்கொட, பூகொட, துல்ஹிரிய
8. உருக்குத் தொழிற்சாலை - ஒலுவல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஒட்டுப்பலகை தொழிற்சாலை - ஜின்தோட்டை
10. பீங்கான் தொழிற்சாலை - பிலியந்தலை
11. கனிப்பொருள் சுத்திகரிப்பு தொழிற்சாலை- புல்மோட்டை
12. இரும்புத் தொழிற்சாலை - யக்கல
13. டயர், ரியூப் தொழிற்சாலை - களனி
14. கோதுமை மா ஆலை - திருகோணமலை
15. தோல் பதனிடும் தொழிற்சாலை - மட்டக்குழிய
16. பால்மா தொழிற்சாலை - அம்பேவல
17. ஒட்டுத் தொழிற்சாலை - நீர்கொழும்பு, ஒட்டிசுட்டான், சிலாபம்
18. இல்மனைட் சுத்திகரிப்பு தொழிற்சாலை - புல்மோட்டை
19. முகமூடி தொழிற்சாலை - அம்பலாங்கொட
20. எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் - சப்புகஸ்கந்த
21. மரத்தளபாட தொழிற்சாலை - மொறட்டுவ
22. பாய் இழைத்தல் தொழிற்சாலை - தும்பறை, ஜின்தோட்டை
23. கடலாமை - காலி
24. பால்பவுடர் - வெலிசர
25. றப்பர் பால் - மாவனல்ல
26. மட்பாண்டம் - ரத்தோட்டை, தங்கொட்டுவ
27. ரயர் - களனி

க. சஞ்சீதா
2011 Com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளியல் என்றால் என்ன என்பது பற்றி அறிஞர்கள் பலர் தமது வரைவிலக்கணங்களை கூறியுள்ளனர். அவர்களின் வரைவிலக்கணங்கள் சில..

1. **அடம்ஸ்மித் (பொருளியலின் தந்தை)**

பொருளியல் என்பது "செல்வத்தின் விஞ்ஞானமாகும்" எனக் கூறினார். இவ்வறிஞரால் தேசங்களின் செல்வம் (The Wealth of Nations) என்ற நூல் வெளியிடப்பட்டது. அதன் பின்னரே பொருளியல் தனியானதொரு அறிவியலாக வளர்ச்சியடையத் தொடங்கியது.

2. **அரிஸ்ரோட்டில்**

"வீட்டுத் துறையை முக்கியத்துவம் செய்வதற்கான கலையே பொருளியல்" எனக் குறிப்பிட்டார்.

3. **ஜே.பி.சே (Jean Baptist Say)**

"பொருளியல் கற்கையில் அடிப்படை வாதி செல்வத்தை ஆளுவதேயாகும்" எனக் கூறுகின்றார்.

4. **அமெரிக்கப் பொருளியல் அறிஞர் எப.ஏ.வோல்கர்**

"பொருளியல் என்பது அறிவின் ஒரு பகுதியாக இருப்பதுடன் அது செல்வத்தோடு தொடர்புடையது" எனக் கூறினார்.

5. **அல்பிரட் மார்சல்**

"பொருளியல் என்பது "மனித நடத்தையைப் பற்றி ஆராய்வு செய்கின்றது. ஒரு புறத்தில் செல்வத்தைப் பற்றியும், மறு புறத்தில் அதை விட முக்கியத்துவம் வாய்ந்த மனிதனைப் பற்றியும் ஆராய்வு செய்கிறது" எனக் கூறினார்.

6. **லயனல் றொபின்ஸ்**

பொருளியல் விஞ்ஞானமும் அதன் தன்மையும், முக்கியத்துவமும் என்ற நூலின் மூலமாக பொருளியல் என்பது "மாற்றுப் பயன்பாடுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமையான வளங்களுக்கும் மனித நடத்தைக்குமிடையிலான தொடர்பை ஆராயும் விஞ்ஞானமாகும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

**7. பேராசிரியர் கென்றிசிமித்**

பொருளியல் பற்றிய ஆய்வானது நாகரீகம் அடைந்த சமுதாயம் ஒன்றில் மக்கள் தமக்குத் தேவையான பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதையும் சமூக மாற்றங்களுக்கும் முன்னேற்றங்களுக்கும் ஏற்ப மொத்த உற்பத்தியில் ஏற்படும் மாற்றங்களை நிர்ணயிப்பதையும் விளக்குவதாகும்" என குறிப்பிட்டுள்ளார்.

**8. பேராசிரியர் கெயின்ஸ்**

"பொதுக் கொள்கை என்ற நூலின் வாயிலாக பொருளியல் என்பது அருமையான மாற்று உபயோகமுள்ள வளங்களை நெறிப்படுத்துவது பற்றிய ஆய்வாகும். இது வேலை மட்டம் வருமானம் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் ஆற்றலாகவும் உள்ளது" எனக் கூறினார்.

ஆக்கம்
வி.ஜினக்சனா
தரம் - 12 com
(2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

வல்லினம், மெல்லினம், இடையினம் கொண்டது தமிழ்

வன்மை பேசி வாதிடப் பயன்படுவதும் தமிழ்

முத்தமிழ் கொண்டதும் தமிழ்

முறைப்படி இலக்கிய இலக்கணம் கொண்டு அழியாது வாழ்வதும் தமிழ்

மெல்லத் தமிழ் இனிச்சாகும் என்று கூறியோரை அறிவியல்த் தமிழால் அசந்து போக வைத்ததும் தமிழ்

கம்பர் வள்ளுவர், இளங்கோ ஆகியோர் பெருமை பெறக் காரணமும் தமிழ்

பக்தியின் மொழி என் தன்னை பகர வைத்ததும் தமிழ்

செம்மொழி என்ற சிறப்புப் பெயரை செயலூக்கத்துடன் பெற்றதும் தமிழ்

சொற்களுக்குச் செருக்குண்டு என்று சொன்னதும் தமிழ்

வசனத்தில் கவிதை பாடலாம் என்று பாரதிக்கு ஊக்க மூட்டியதும் தமிழ்

தமிழன் பெருமை பேச சொற்களுக்குத்தான் முடியுமா?

நாவன்மையால் நாவலரை அந்நியருடன் போராட நற்றுணை புரிந்ததும் தமிழ்

- அதுமட்டுமா

போராடிய மேனாட்டரை தன்பால் ஈர்த்ததும் தமிழ்

எழுதுங்கள் என் கல்லறையில் - இங்கே ஒரு தமிழ் மாணவன்

உறங்கிக் கொண்டிருக்கிறான் என்று – போப்பை

புகழ் மொழி பாட வைத்ததும் தமிழ்

வாழ்க தமிழ் வளர்க அதன் புகழ்

ம.பிரவிந்

தரம் - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்மொழிகள்

| | | |
|---|---|---|
| ➢ வருவதும் போவதும் இரண்டு | - | இன்பம், துன்பம் |
| ➢ வந்தாலும் போகாதது இரண்டு | - | புகழ், பழி |
| ➢ போனால் வராதது இரண்டு | - | மானம், உயிர் |
| ➢ தானாக வருவது இரண்டு | - | இளமை, மூப்பு |
| ➢ நம்முடன் வருவது இரண்டு | - | பாவம், புண்ணியம் |
| ➢ அடக்க முடியாதது இரண்டு | - | ஆசை, துக்கம் |
| ➢ எல்லாருக்கும் சமமானது இரண்டு | - | பிறப்பு, இறப்பு |
| ➢ செய்ய வேண்டியது | - | உதவி |
| ➢ செய்யக் கூடாதது | - | உபத்திரம் |
| ➢ இருக்க வேண்டியது | - | மானம் |
| ➢ இருக்கக் கூடாதது | - | ஆணவம் |
| ➢ மேல் தரமானது | - | நட்பு |
| ➢ கீழ்த்தரமானது | - | துரோகம் |
| ➢ வாழத் தேவையானது | - | நம்பிக்கை |
| ➢ வாழத் தேவையற்றது | - | சந்தேகம் |
| ➢ மனித உணர்வு | - | பிரிவு |
| ➢ பகுத்தறிவான உணர்வு | - | இரக்கம் |
| ➢ புனிதமான உணர்வு | - | அன்பு |

லோ.லோஜினா
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள்

சமூகத்தின் தேவைகள் வரையறையற்றவையாகவும் அளவிடப்பட முடியாதவையாகவும் காணப்படுகின்றன. ஆனால் அச் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அச் சமூகத்திற்குக் கிடைக்கத் தக்கதாக உள்ள வளங்கள் வரையறுக்கப்பட்டவையாகவும் அளவிடப்படக் கூடியவையாகவும் காணப்படுகின்றன. அத்துடன் இவ்வளங்கள் மாற்றுப் பயன்பாட்டுத் தன்மையைக் கொண்டவையாகவும் காணப்படுகின்றன.

எனவே சமூகத்தின் தேவைகளுடன் ஒப்பிடுமிடத்து பற்றாக்குறையானதும் அல்லது அருமையானதும் மாற்றுப் பயன்பாடுகளைக் கொண்டதுமான வளங்களைப் பயன்படுத்தி வரையறையற்ற சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படும் போது ஒவ்வொரு சமூகமும் எதிர்நோக்கும் தெரிவுப் பிரச்சனைகளே அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளாகும்.

அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் பிரதானமாக பின்வரும் மூன்று வகைகளாகக் காணப்படுகின்றன.

**1. என்ன பொருளை எந்தளவு உற்பத்தி செய்தல.**

அருமையானதும் மாற்றுப் பயன்பாட்டுத் தன்மையைக் கொண்டதுமான வளங்களை சமூகத்தின் பல்வேறுபட்ட தேவைகளின் மத்தியில் எந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தெரிவு செய்வது/ ஒதுக்குவது என்பதே என்ன பொருளை உற்பத்தி செய்தல் என்ற பிரச்சனையாகும்.

எனவே இப்பிரச்சனை ஓர் வள ஒதுக்கீட்டுப் பிரச்சனையாகும் என்ன பொருளை உற்பத்தி செய்வது என்ற முடிவினை எடுத்த பின்னர் அதில் எவ்வளவு பொருட்களை உற்பத்தி செய்வது என்ற தீர்மானத்தினையும் எடுத்தல் வேண்டும். வளங்களின் மாற்றுபயோகத்தன்மை காரணமாகவே இப்பிரச்சனையை எல்லாச் சமூகங்களும் எதிர்நோக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. எப்படி / எவ்வாறு உற்பத்தி செய்தல்

உற்பத்தியில் கையாளப்பட்ட வேண்டிய பொருத்தமான ஒரு தொழில்நுட்ப முறையை தெரிந்தெடுக்கும் பிரச்சனையே எப்படி உற்பத்தி செய்தல் எனும் பிரச்சனையாகும் அதாவது ஒரு பொருளின் உற்பத்தியில் கையாளப்படுவதற்கு பல்வேறு வகையான தொழில் நுட்பமுறைகள் காணப்படும் போது அதில் எந்த முறையைத் தெரிவுசெய்வது என்பதே இப்பிரச்சனையாகும்.

**பொதுவாக ஒரு பொருளாதாரத்தில் பின்வரும் தொழில்நுட்ப முறைகள் காணப்படலாம்.**

1. ஊழியச் செறிவான தொழில் நுட்பமுறை
   ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு ஏனைய உற்பத்திக் காரணிகளை விட ஒப்பீட்டு ரீதியில் ஊழியத்தைக் கூடுதலாக பயன்படுத்திக் கொள்ளும் முறையை இது குறிக்கும்.

2. மூலதனச் செறிவான தொழில்நுட்பமுறை
   ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு ஏனைய உற்பத்திக் காரணிகளைவிட ஒப்பீட்டு ரீதியில் மூலதனத்தை பயன்படுத்திக் கொள்ளும் ஒரு முறையை இது குறிக்கும்.

3. நிலச் செறிவான தொழில் நுட்பமுறை
   ஒரு பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு ஏனைய உற்பத்திக் காரணிகளை விட நிலத்தை அதிகளவில் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு முறையை இது குறிக்கும்.

எனவே மேற்கூறப்பட்ட பல்வேறு வகையான தொழில்நுட்பமுறைகள் ஒரு நாட்டில் காணப்படும்போது அதில் எந்தத் தொழில்நுட்பமுறையை தெரிந்துதெடுத்து உற்பத்தியினை மேற்கொள்ளவது என்பதே எவ்வாறு உற்பத்தி செய்தல் எனும் பிரச்சனையாகும் எவ்வாறு உற்பத்தி செய்தல் எனும் பிரச்சனையானது பொருத்தமான காரணிச் சேர்க்கை ஒன்றினைத் தெரிவு செய்யும் பிரச்சனையாகக் காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. யாருக்காக உற்பத்தி செய்தல்.

என்ன பொருளை எந்தளவு உற்பத்தி செய்தல், எவ்வாறு உற்பத்தி செய்தல் என்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் போது பொருட்கள் சேவைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை எவ்வாறு பங்கீடு செய்வது என்பதே யாருக்காக உற்பத்தி செய்தல் எனும் பிரச்சனையாகும். அதாவது ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியை அவ்வுற்பத்தியில் ஈடுபட்ட நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி ஆகிய உற்பத்திக் காரணிகளின் உடமையாளர்களிடையே / மக்களுக்கிடையே என்ன அடிப்படையில் பங்கீடு செய்வது என்பதே இப்பிரச்சனையாகும்.

இவ் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் யாவும் தோன்றுவதற்குப் பிரதான காரணம் வளப்பற்றாக்குறை/ வளங்களின் அருமைத் தன்மையே ஆகும். அதாவது வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு வரையறையற்ற சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படும் போதே அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகள் தோன்றுகின்றன.

நாம் எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு பல்வேறு பொருளாதார முறைமைகள் தோற்றம் பெற்றுள்ளன.

நன்றி.

தியாகராசா தெய்வகௌரி
12Com (2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு

### அறிந்து கொள்ளுங்கள்

01. மனிதன் இறந்த பின்னும் வளரும் சிற்றுருப்புக்கள் எவை?
    தலைமுடி, நகம்
02. மனித உடலில் காணப்படும் மிகப் பெரிய உறுப்பு எது?
    கல்லீரல்
03. மனித உடலில் மிக வன்மையான உறுப்பு எது?
    பல் மிளிரி
04. மனித உடலில் மிக நீண்ட எலும்பு எது?
    தொடை எலும்பு
05. பிறப்பின் போது சிசுவின் சராசரி நீளம் எவ்வளவு?
    50செ.மீ
06. மனிதனின் இதயத்தின் எடை எவ்வளவு?
    220 – 260கி
07. மனித உடலில் ஓடும் இரத்த வகைகள் எவை?
    A, B, AB, O
08. சீனாவின் துயரம் எனப்படுவது
    குவாங்கோநதி
09. மழைத்துளியில் உள்ள விற்றமின் எது?
    பொட்டாசியம்
10. தண்ணீரில் மிதக்கும் உலோகம் எது?
    பொட்டாசியம்

வீ. டிஷாளினி
11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்கண்ட கல்வித் தெய்வங்கள்

கண்கண்ட கல்வித் தெய்வங்களே!
கல்வியை மெருகூட்டும் ஆசான்களே!
கல்வியில் நாம் வித்தகர்கள் ஆகிவிட!
காலங்களை கரைக்கும் உள்ளங்களே!

தேனான மொழியை வளர்க்கும் தென்றல்களே!
தேசம் உயர்ந்திட உழைக்கும் உத்தமர்களே!
நமக்கு நல்வழியைக் காட்டும் வழிகாட்டிகளே!
நாட்களை நமக்காக கரைக்கும் உள்ளங்களே!

ஆற்றல்கள் நிறைந்த அறிவாளிகளே!
அன்புடன் நமை நடத்தும் நெஞ்சங்களே!
விருப்புடன் நாம் கற்க வித்திடும் வித்தகர்களே!
விடிவை எமக்கு தந்திடும் விடிவெள்ளிகளே!

பூக்கள் தூவி வணங்குகிறோம்.!
பூமாலை சூடியே வாழ்த்துகிறோம்!
பாட்டுக்கள் பாடியாங்கே மகிழ்கிறோம்!
பாரினிலே உயர்ந்திட ஆசான்களை போற்றுகின்றோம்.!

ஆக்கம்: மதுசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகமயமாக்கல்

உலக மயமாக்கல் என்பது நெடிய நீண்டகால மனித வாழ்க்கை செயன்முறை ஒன்றின் தவிர்க்க முடியாத ஒரு விளைவாகும் வாங் ஹாயிகியோவ் 1993ம் ஆண்டு உலகமயமாக்கலை விரிவாக நான்கு முறையில் வகைப்படுத்தியுள்ளார்.

1. உயிரின சூழலின் உலகமயமாக்கல்
2. பொருளாதார சூழலின் உலகமயமாக்கல்
3. தொழில்நுட்ப சூழலின் உலகமயமாக்கல்
4. சமூக கலாச்சார சூழலின் உலகமயமாக்கல்

அதிகரித்து வருகின்ற உலகளாவிய ஒருங்கிணைப்பின் காரணமாக நீண்ட காலமாக வேரூன்றியிருந்த சமூக கலாச்சார விழுமியங்களும் வாழ்க்கை முறைகளும் முற்றும் முழுதான நிலைமாற்றம் ஒன்றிற்கு மாறிச் செல்லக் கூடும். கலாச்சாரம் வாழ்க்கை முறை என்பவை ஆழமாக எமது வாழ்க்கையில் வேரூன்றி காணப்பட்ட போதும் படிப்படியாக மாற்றம் அடைந்துவரும் ஒரு உலகில் இவை மாற்றங்களுக்கு உட்படுகின்றன இதற்கான முக்கிய காரணங்களாக சுற்றுலாத்துறை வளர்ச்சி நேரடி செய்மதி தொலைக்காட்சி சேவைகள் ஒலிபரப்புகள் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மிக விரைவான போக்குவரத்து முறைகள் போன்றன காணப்படுகின்றன.

மறுபுறத்தில் தகவல் தொழில்நுட்ப புரட்சி காரணமாக இணையப் பாவனை தொடர்பாடல் வளர்ச்சி என்பன உலகை ஒரு பூகோளமாக (Global Village) மாற்றியுள்ளன. மேலும் பொருளாதார நடவடிக்கைகள் நாடுகளின் எல்லைகளுக்கு அப்பால் பிராந்திய பொருளாதார நடவடிக்கைகள் நாடுகளின் எல்லைகளுக்கு அப்பால் பிராந்திய ரீதியாக முழு சர்வதேச ரீதியாக விரிவுபடுத்தி செல்லும் நிலமைக் காணப்படுகின்றது இதன் அடிப்படையில் உலகளாவிய ரீதியாக செயற்படும் நிறுவனங்கள் பாரிய அளவில் தமது செயற்பாடுகளை அதிகரித்து வருகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஏற்றத் தாழ்வான ஓர் போட்டியில் தம்மை ஈடுபடுத்தியுள்ளன இப்போட்டியானது பொருளாதாரம் அரசியல் மற்றும் சமூகம் சார்ந்ததாகக் காணப்படுகின்றது ஆயினும் வளர்ச்சியடைந்த நாடுகள் தமது மூலதன பலத்தினால் அல்லது ஏகபோக உரிமையினால் வளர்ந்து வரும் நாடுகள் மீது பின்வரும் வகையில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன தொழில்நுட்ப ஏகபோகம், உலகளாவிய நிதி நிறுவனங்களை கட்டுப்படுத்தல் புவியின் இயற்கை வளங்களின் மீது ஏகபோக உரிமை, ஊடக தொடர்பாடல் பாரிய அளவான ஆயுதங்கள், நாடுகளின் அரசியல் புவியியல் எல்லைகள் நீக்கப்பட்டு உலகம் முழுவதையும் பொது அமைப்பாக கருதி மக்கள் தமது உற்பத்தி வர்த்தகம், கலாச்சாரம் கல்வி அரசியல் போன்றவற்றை பொதுவான ஓர் வளர்ச்சியடைந்த வாழ்க்கை முறைக்கு மாற்றி செல்லும்.

**உலக மய மாக்கலின் தாக்கம்**

- நாடுகளுக்கிடையிலான அரசியல் எல்லைகளும் பிணைப்புகளும் முக்கியத்துவம் அற்றுக் காணப்படும் நிலை
- தொழில்நுட்பம் மிக வேக மாற்றம் அடைகின்றமை.
- நவீன மிக விரைவான போக்குவரத்து சாதனங்கள் அறிமுகப் படுத்தப்பட்டமை
- குறித்த ஒரு பொருளின் பாகங்கள் பல நாடுகளில் உற்பத்திச் செய்யப்பட்டு முடிவுப் பொருளாக்கப்படும் நிலை தோன்றியுள்ளமை.

உலக மயமாக்கலின் தற்போதைய போக்கு

- நாடுகளுக்கிடையில் அரசியல் புவியியல் எல்லை நீக்கப்பட்டு தடையற்ற பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் நிலை அதிகரித்தல்.
- வலய வர்த்தக ஒப்பந்தங்கள் உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்படுதல்
  Eg: EC, NAFTA, SAFTA, ASEAN
- வெளிநாட்டு நேரடி முதலீடுகள் நாடுகளில் அதிகரித்தல் முக்கியமாக வளர்முக நாடுகளில்
- இலத்திரனியல் வணிக நடவடிக்கைகள் மிக வேக வளர்ச்சியடைந்து விடுகின்றமை.

சங்கீதா
12 Com (2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்பரிசு

- எதிரிக்கு கொடுக்கும் நற்பரிசு - மன்னிப்பு
- பகைவனுக்கு கொடுக்கும் நற்பரிசு - விட்டுக்கொடுத்தல்
- நண்பனுக்குக் கொடுக்கும் நற்பரிசு - செவிமடுத்தல்
- குழந்தைக்குக் கொடுக்கும் நற்பரிசு - முன்மாதிரிகை
- தந்தைக்குக் கொடுக்கும் நற்பரிசு - நல்வணக்கம்
- தாய்க்குக் கொடுக்கும் நற்பரிசு - அருகிலிருத்தல்
- எல்லாவற்றிற்கும் கொடுக்கும் நற்பரிசு - தியாகம்

## மனிதன் உயிரிழந்த பின்பு உறுப்புக்கள் செயலிழக்கும் நேரம்

- கண்கள் - 31 நிமிடங்கள்
- மூளை - 10 நிமிடங்கள்
- கால்கள் - 4 மணி நேரம்
- தசைகள் - 5 நாட்கள்
- இதயம் - சில நிமிடங்கள்

க. ஹிஷாந்தி
தரம் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தினங்கள்

- ஜனவரி 31 - உலக தொழுநோயாளர் தினம்
- மார்ச் 08 - சர்வதேச மகளிர் தினம்
- மார்ச் 15 - உலக ஊனமுற்றோர் தினம்
- ஏப்ரல்07 - உலக ஆரோக்கிய தினம்
- ஏப்ரல் 17 - உலக இரத்த தினம்
- ஏப்ரல் 22 - உலக பூமி தினம்
- மே 01 - உலக தொழிலாளர் தினம்
- மே 08 - உலக செஞ்சிலுவை தினம்
- யூன் 05 - உலக சுற்றுச் சூழல் தினம்
- யூன் 26 - போதைப் பொருள் தடுப்பு தினம்
- யூலை 28 - உலக அகதிகள் தினம்
- செப்ரெம்பர் 03 - சர்வதேச சமாதான தினம்
- செப்ரெம்பர் 16 - உலக ஓசோன் தினம்
- ஒக்ரோபர் 01 - உலக சிறுவர் முதியோர் தினம்
- ஒக்ரோபர் 06 - உலக ஆசிரியர் தினம்
- ஒக்ரோபர் 10 - உலக உளநல தினம்
- ஒக்ரோபர் 15 - வெள்ளைப் பிரம்பு தினம்
- ஒக்ரோபர் 17 - உலக மாணவர் தினம்
- டிசம்பர் 01 - உலக எயிட்ஸ் தினம்
- டிசம்பர் 10 - மனித உரிமை தினம்
- டிசம்பர் 23 - உலக விவசாய தினம்

வி. சஜானா
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை

- ஒரு சவால் அதனைச் சிந்தியுங்கள்
- ஒரு பரிசு, அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்
- ஒரு சாகசப்பயணம் அதனை மேற்கொள்ளுங்கள்
- ஒரு சோகம் அதனைக் கடந்து வாருங்கள்
- ஒரு துயரம், அதனைத் தாங்கிக் கொள்ளுங்கள்
- ஒரு கடமை அதனை நிறைவேற்றுங்கள்
- ஒரு விளையாட்டு, அதனைக் கண்டறியுங்கள்
- ஒரு பாடல் அதனைப் பாடுங்கள்
- ஒரு சந்தர்ப்பம் அதனைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்
- ஒரு பயணம், அதனைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்
- ஒரு பயணம் அதனைப் புகழுடன் முடித்துக் கொள்ளுங்கள்
- ஒரு உறுதி அதனை அனுபவியுங்கள்
- ஒரு அழகு, அதனை அதாரியுங்கள்
- ஒரு உணர்வு, அதனை உணர்ந்து கொள்ளுங்கள்
- ஒரு போராட்டம், அதனை எதிர்கொள்ளுங்கள்
- ஒரு குழப்பம், அதனை உணர்ந்து கொள்ளுங்கள்
- ஒரு இலக்கு, இதனை எட்டிப்படியுங்கள்.

ஆக்கம்:
ப. டினுஜா
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது அறிவு

01. இராணுவம் இல்லாத நாடு எது?

கோஸ்டாரிக்கா

02. இரண்டு பிரதமர்களை கொண்ட நாடு எது?

சானா மோசினா

03. நைலோன் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?

ராம்லாந்து

04. 2009 தொலைத் தொடர்பாடல் மாநாடு எங்கு இடம்பெற்றது?

கொழும்பு

05. இருண்ட கண்டம் எனப்படும் கண்டம் எது?

ஆபிரிக்க கண்டம்

06. அதிகாலை அமைதி நாடு எனப்படும் நாடு எது?

கொரியா

07. வெள்ளையனின் கல்லறை எனப்படுவது எது?

கினி கடற்கரை

08. இரத்த வங்கிகள் அதிகமுள்ள நாடு எது?

இந்தியா

09. x கதிர்கள் ஊடுருவால் உலோகம் எது?

ராஜியம்

10. தமிழகத்தில் மேல் அமைச்சராக இருந்தவர் யார்?

தப்பராயலு

தொகுப்பு
தெ. பிரவீனா
11B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கு விநோதங்கள்

1. ஒரு வருடம் ஆணாகவும் ஒரு வருடம் பெண்ணாகவும் வாழும் உயிரினம் ஈரிதழ் சிப்பி ஆகும்.
2. 640 நாள் கருவில் குட்டியைச் சுமந்து பிரசவிக்கும் உயிரினம் ஆபிரிக்க யானை ஆகும்.
3. வாத்துக்கள் எழுப்பும் ஒலிக்கு எதிரொலி வருவதில்லை
4. மாடுகளால் மாடிப்படி ஏறிவர முடியும் ஆனால் இறங்க முடியாது.
5. பெண் கும்பிடு பூச்சி உடல் உறவு கொள்ளும்போது தனது ஜோடி ஆணின் தலையை தின்றுவிடும்
6. துருவக்கரடிகள் அனைத்தும் இடது கை பழக்கம் உடையன
7. நீல நிறத்தினை அடையாளம் காணக்கூடிய ஒரே பறவை ஆந்தை மட்டும் தான்.
8. உலகின் மிகப்பலமான ஒலியினை வெளிப்படுத்துகின்ற உயிரினம் நீலத்திமிங்கிலங்களாகும். இவற்றின் ஒலியினை 800 கி.மீ க்கு அப்பாலும் உணரமுடியும்.
9. மண்புழுக்கள் 5 இதயங்களை கொண்டுள்ளன.
10. குதிரையின் காதினை விடவும் கழுதையின் காது நீளமானது.

ர.ரிதுசன்

தரம் - 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Friendship

There is no limit or boundry to form friendship. Friendships are formed between old age people poor people creed and gender. A child can make friendship with an older one. Sometime wealthy children make friendship with poor ones and help them. Feelings of human beings find friendship if a child feels to keep friendship with a puppy or kitten it also can be considered as a friendship ness.

They are their care takers and real friends blind people who keeps dogs as their friends they took them where ever they want The real friendship has no secrets between each other. True and real friends share their feelings like sadness, happiness and affection. There are some friends keeps friendship with wealthy ones to execute their wishes.

If the wealthy one have no money fraud friends will vanish caring and sharing make a healthy friendship It last long. In our life we hear that for a real friend they render their life for their friend.

Creation:
S. Shobika
Grade – $11^{A}$


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதையற்ற நாளைய உலகு

- இரக்கத்தின் இருப்பிடமாம் கருணையின் உறைவிடமாம் அன்னை திரேசா அவர்களின் முது மொழிக்கிணங்கப் போதைப் பொருளின் அடிமைகள் ஒரு வகையான நோயாளிகளே இவ்வுலக வாழ்க்கை என்பது நேர் நோக்கும் நன்றியுணர்வும் நிறைந்தது என்று அவர்கள் உணரும் வகைக்கும் அவர்கள் நோயாளிகளே. எனவே மதுபோதைக்கு அடிமையானவன் காலப் போக்கிலே மன நோயாளியாகின்றான்.

- இன்றைய இளைய சந்ததியினரின் கணிசமான தொகையினர் போதை நிறைந்த பாதையிலே செல்லும் பேதைகளாக இருக்கின்றனர். உடல் நலம் இழந்து உள உரம் இழந்து தன் மடமைத்தனம் காரணமாகக் கெட்டழிந்து குட்டிச் சுவராகிக் கொண்டிருக்கிறார்கள. இச் சீரிய வாழ்வை வாழ முடியாத எதிலிகளாக சமுதாயத்திலிருந்து ஒதுக்கப்பட்டு புறந்தள்ளப்பட்டு தனி முத்திரை குத்தப்பட்ட நாட்டின் தனிப் பெரும் சக்தியாக போதைப் பொருளின் அடிமைகள் உருவெடுத்து இருக்கின்றார்கள் என்றால் அது எமது நாட்டின் எதிர்காலச் சந்ததியினரின் வாழ்வை குட்டிச் சுவராக்கிக் குன்றி விடும் என்பதில் மாற்ற மேதுமில்லை. மதுவரக்கன் இன்று மனிதர்களின் மதியை அழித்து நன் அட்டகாசமான ஆட்சியினால் கொட்டமடித்துக் கொண்டிருக்கிறான்.

- அந்த வகையில் தற்போதைய உலகை எடுத்துக் கொள்வோமாயின் பருவம் அடைந்து நிற்கும் வயதினரே போதைப் பொருளிற்கு அடிமைகளாகி சிக்கி திளைத்துக்கொண்டிருக்கிறார்கள். வாலிபத்தின் வசந்தம் காற்று வாசம் தெளித்திடும் வயதினிலே போதை எனும் அரக்கனுக்குள்ளே உறங்கி சீர் கெட்ட உலகினிலே தீவிரவாதிகள் ஆகின்றனர். ஆமை வேகத்தில் வரும் மரணத்தை முயல் வேகத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துக் கொள்கின்றான். இப்படியாக இன்றைய சந்ததியினர் ஒவ்வொருவரும் பாதை மாறிப் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

- அம்மி மிதித்து அருந்ததி காட்டி இறுதிவரை உன்னைப் பிரியேன் என்று அன்றொரு நான் செய்த சத்தியங்களை சுத்தமாக மறந்து தனக்கென வந்தவளை தன்னாதிக்கத்தைப் பயன்படுத்தி குடியே தன் தொழிலாகக் கொண்டு மங்களமான மாங்கல்யம் ஏறிய மனைவியின் கழுத்திலே தூக்குக் கயிற்றை ஏற்ற வைக்கிறார்கள் இன் மூலமாக ஓர் குடும்பம் சீரழிந்து சின்னா பின்னம் ஆகின்றது. இவர்கள் சுய அறிவில்லாமல் தமது வாயில் வருகின்ற வார்த்தைகளை எல்லாம் கொட்டி விடுகிறார்கள்.

- "குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு" என்பதற்கமைய போதைப் பொருட்களைப் பாவிப்பவர்கள் இவ்வாறு தீய வார்த்தைகளைப் பேசி சமூகத்துடன் முரண்படுவதால் சமுதாயம் அவர்களது குடும்பத்தையே தள்ளி வைத்து விடுகின்றது. இதனால் சுயவாழ்வு கெட்டு குடும்பமும் நிம்மதி பெறுகிறது.

- அடுத்து பாடசாலை மாணவர்களை எடுத்துப் பார்ப்போமானால் தொழில் நுட்ப யுகத்தை பிரகாசமாக மிளிரச் செய்ய வேண்டிய இன்றைய இளைஞர்களே போதைப் பொருளுக்குள் அடிமைகளாக வாழ்வை சீரளிக்கின்றனர். பாடசாலை மாணவர்கள் என்று கூறுமிடத்து உயர்மட்டப் பாடசாலை மாணவர்களே இவ்வாறான தீய பழக்கங்களுக்கு ஆளாகின்றனர். மாணவர்களிடத்தில் ஓர் உளவியல் ரீதியான இடைம ாற்ற நிலை காணப்படுகின்றது. இவர்களிடத்தில் அச்சம், துக்கம், விரக்தி, மனச் சோர்வு, தற்கொலை புரியும் எண்ணம், சந்தேகம் என்பன உண்டாகின்றன. மாணவர்கள் தம்மைப் போதைப் பொருளிற்கு அடிமைகளாகி விடுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் கருத்துடையதாக அமையாவிட்டால் அவர்களுடைய வாழ்க்கையில் மனநிம்மதி இருக்க மாட்டாது.

- "உன் விதியை நிர்ணயிப்பது நீயே என்று உணர்" இவ்வாக்கியத்துக்கு இணங்க இறுதிக் குறிக்கோளை எய்துவதற்குரிய நடத்தைக் கேற்ப சிற்சில விழுமியங்களை ஒதுக்கிக் கொள்வதன் மூலமாக அவரவர் வாழ்க்கையின் ஓர் திசையை வகித்துக் கொள்ள முடியும்.
- எனவே இன்று பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி உலக நாடுகளின் நகர்ப்புறங்களிலும் கிராமப்புறங்களிலும் இது ஓர் பொல்லாத கிரிமியாக பரவி வருகிறது. போதைப் பொருளின் தாக்கமானது ஓர் உச்சக் கட்டத்தை அடைந்து விட்டது. என்றே கூறிவிடலாம். இன்று ஆண்கள் மட்டுமன்றி பெண்களும் போதைப் பொருளுக்கு ஆளாகி விட்டார்கள்.

- எனவே மது பற்றிய பழையான நம்பிக்கைகளை உடைத் தெறிந்து மது நோய்க்கு அடிமையான நோயாளரை அன்புகாட்டி மதிப்பளித்து தனிமை போக்கி அடிமை நிலையில் இருந்து விடுவித்து சிகிச்சைக்கு வரப் படுத்தி ஆரோக்கியமான வளமான வாழ்க்கை முறையை உருவாக்க ஒவ்வொருவரும் உறுதி கொள்வாராயின் போதை அற்ற நாளைய உலகின் மேதைகளாக விளங்குவார்கள் என்பதில் அய்யமில்லை.

- "மதுவை விடு மங்கள வாழ்விற்கு விளக்கேற்றது"

தெ.கஜன்
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுகளும் நாணயங்களும்

| | | |
|---|---|---|
| 1. | நாடு | நாணயம் |
| 2. | அங்கோலா | நியூகுவான்யா |
| 3. | அசர்பெய்ஜான் | மனாட் |
| 4. | அமெரிக்கா | டொலர் |
| 5. | அயர்லாந்து | யூரோ |
| 6. | அர்மீனியா | டிராம் |
| 7. | அவுஸ்ரேலியா | அவுஸ்ரேலிய டொலர் |
| 8. | அல்பேனியா | லெக் |
| 9. | அல்ஜீரியா | டினார் |
| 10. | அன்டோரா | மிரென்ச் பிராங் |
| 11. | ஆப்கானிஸ்தான் | ஆப்கான் |
| 12. | அன்வோ & பார்புடா | கிழக்கு ஸ்ரீவியன் டொலர் |
| 13. | ஆஸ்திரியா | யூரோ |
| 14. | ஆர்ஜென்டீனா | பெஸோ |
| 15. | இத்தாலி | யூரோ |
| 16. | இந்தியா | ரூபாய் |
| 17. | இந்தோனேசியா | ருபியா |
| 18. | இலங்கை | ரூபாய் |
| 19. | இஸ்ரேல் | ஷேகெல் |
| 20. | ஈக்வாடர் | அமெரிக்கா டொலர், சுக்ரி |
| 21. | கினியா | மிராங்க் |
| 22. | ஈரான் | ரியால் |
| 23. | ஈராக் | ஈராக்கிய தினார் |
| 24. | உகண்டா | உகண்டா ஷில்லிங் |
| 25. | உக்ரைன் | ஹறிவ்னியா |
| 26. | உருகுவே | பெசேலா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 27. | உங்பெகிஸ்தான் | சோம் |
| 28. | எகிப்து | எகிப்திய பவுண்டு |
| 29. | எதியோப்பியா | பிர் |
| 30. | எரித்தியா | நக்.்.பா |
| 31. | எல்சல்வடோர் | அமெரிக்க டொலர் |
| 32. | எஸ்ரோனியா | குரூன் |
| 33. | ஐக்கியசார்பு குடியரசு | திர்ஹாம் |
| 34. | ஐவரிகோஸ்ட் | பிராங்க் |
| 35. | ஐஸ்லாந்து | குரோனா |
| 36. | ஓமான் | ஓமானி றியால் |
| 37. | கட்டார் | றியால் |
| 38. | கம்போடியா | றியால் |
| 39. | கயானா | கயானா டொலர் |
| 40. | கனடா | கனடா டொலர் |
| 41. | கஸகஸ்தான் | டெங்கே |
| 42. | காமோன் | பிராங்க் |
| 43. | காம்பியா | தலாசி |
| 44. | கமஜன் | பிராங்க் |
| 45. | கொமரோஸ் | கொமோரியன் பிராங்க் |
| 46. | கானா | செடி |
| 47. | கியூபா | பெலேவா |
| 48. | கிரிபாடி | அவுஸ்ரேலியா டொலர் |
| 49. | கிர்கிஸ்தான் | சோம் |
| 50. | கிறிஸ் | யூரோ |
| 51. | கிழக்குத் மோர் | டொலர் |
| 52. | கினியா | கினியா பிராங்க் |
| 53. | கிரெனடா | கிழக்கு கரிபியன் டொலர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 54. | கினியா பிங்ஸெ | பிராங்க் |
| 55. | குரோஷியா | குனா |
| 56. | குவைத் | குவைத் தினார் |
| 57. | கென்யா | ஷில்லிங் |
| 58. | கேப்வெர்ட் | எஸ்குடோ |
| 59. | வடகொரியா | வோன் |
| 60. | தென்கொறியா | வோன் |
| 61. | கொலம்பியா | பைஸோ |
| 62. | கொங்கோ | பிராங் |
| 63. | கொங்கோ | கொங்கோலிஸ் பிராங் |
| 64. | கொளதமாலா | குவட்சால் |
| 65. | சமோவா | தலா |
| 66. | சாட் | பிராங் |
| 67. | சாம்பியா | குவாச்சா |
| 68. | சொலமன் தீவுகள் | சொலமன்தீவு டொலர் |
| 69. | சாவோபோம் & பிரன்சிப் | டோப்ரா |
| 70. | சான்மரினோ | யூரோ |
| 71. | சிங்கப்பூர் | சிங்கப்பூர் டொலர் |
| 72. | சிம்பாபே | சிம்பாபே டொலர் |
| 73. | சியற்லாலிரோன் | லியோன் |
| 74. | சிரியா | சிரியன் பவுண்ஸ் |
| 75. | சிலி | பெஸோ |
| 76. | சீனா | யென் |
| 77. | ஹொங்கொங் | ஹொங்கொங் டொலர் |
| 78. | மக்காவ் | படாகா |
| 79. | கரினாம் | கில்டர் |
| 80. | சிலாந்து | லிவாங்கனி |
| 81. | சுவிட்சாலாந்து | சுவிஸ்பிராங்க் |
| 82. | சுவீடன் | குரோனா |
| 83. | சூடான் | தினார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 84. | செக்குடியரகு | கொளுனா |
| 85. | சென்ட்கிட்ஸ் நெவிஸ் | கிழக்கு கரிபியன் டொலர் |
| 86. | சென்லுசியா | கிழக்கு கறிபியன் டொலர் |
| 87. | சென்ட்விட் சென்ட் | கிழக்கு கிறீபியன் டொலர் |
| 88. | செர்மியா | புதியதினார் |
| 89. | செனகல் | பிராங்க் |
| 90. | சேஷெல்ஸ் | ரூபாய் |
| 91. | சைப்ரஸ் | சைப்பிரஸ் பவுண்ஸ் |
| 92. | சோமாலியா | சோமாலி ஷில்லிங் |
| 93. | சவுதி அரேபியா | றியால் |
| 94. | கோஸ்டரீகா | கொலோன் |
| 95. | டென்மார்க் | குரோன் |
| 96. | டொமினிக்கன் குடியரசு | பெலோ ஓரோ |
| 97. | டொமினிகா | கிழக்கு கரிபியன் டொலர் |
| 98. | டோகோ | பிராங்க் |
| 99. | டிரினிடாட் & டொபாசேர் | டிரிகடாலா டொலர் |
| 100. | தாய்லாந்து | பாத் |
| 101. | டாங்கா | டாங்கா |
| 102. | தன்சானியா | ஷல்லிங் |
| 103. | தஜிகிஸ்தான் | தாஜிக் ரூபிலா |
| 104. | துர்க்மீனிஸ்தான் | மனாட் |
| 105. | துருக்கி | துருக்கிய லீரா |
| 106. | துனிடியா | தினார் |
| 107. | தூவலு | அவுஸ்ரேலிய டொலர் |
| 108. | தைவான் | நியூ தைவான் டொலர் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 109. | தென்னாபிரிக்கா | ராண்ட் |
| 110. | நமீபியா | டொலர் |
| 111. | நோர்வே | குரோனர் |
| 112. | நியூசிலாந்து | நியூசிலாந்து டொலர் |
| 113. | நிகராகுவா | கொற்டோபா |
| 114. | நெதர்லாந்து | யூரோ |
| 115. | நேபாளம் | நேபாள ருபின்ஸ் |
| 116. | நைஜர் | பிராங்க் |
| 117. | நைஜீரியா | நைரா |
| 118. | நௌரு | அவுஸ்திரேலிய டொலர் |
| 119. | பங்களதேசம் | ரூபாய் |
| 120. | பராகுவே | குவரானி |
| 121. | பல்கேரியா | லெவ் |
| 122. | பலாங் | அமெரிக்க டொலர் |
| 123. | பனாமா | பால்போவா |
| 124. | பஹ்ரைன் | தினார் |
| 125. | பகாமாஸ் | பஹாமியன் டொலர் |
| 126. | பாகிஸ்தான் | ரூபாய் |
| 127. | பப்புவா நியூகினியா | கினா |
| 128. | பாற்படோஸ் | பாபடோஸ்டொலர் |
| 129. | பிரிட்டன் | ஸ்ரேலிங் பவுண் |
| 130. | பிரான்ஸ் | யூரோ |
| 131. | பிரேஸில் | ரியால் |
| 132. | பிலிப்பைன்ஸ் | பெஸோ |
| 133. | பின்லாந்து | யூரோ |
| 134. | பு.்.ர்கினா.்.பாஸோ | பிராங்க் |
| 135. | புருண்டி | புருண்டிபிராங்க் |
| 136. | புருனே | புருனே டொலர் |
| 137. | பூட்டான் | நகுல்ட்ரம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 138. | பெரு | நியூசோல் |
| 139. | பெல்ஜியம் | யூரோ |
| 140. | பெலாரஸ் | ரூபிள் |
| 141. | பெலிஸ் | பெலிஸ் டொலர் |
| 142. | பெனின் | பிராங்க் |
| 143. | பொலிவியா | பொலிவியனோ |
| 144. | போட்ஸ்வானா | புலா |
| 145. | போலந்து | ஸ்லோட்டி |
| 146. | பொஸ்னியா வெஹர்ச் கோவனா | மார்க் |
| 147. | பிஜி | டொலர் |
| 148. | மங்கோலியா | துக்ரிக் |
| 149. | மடகஸ்கார் | மலாஸி பிராங் |
| 150. | மத்திய ஆபிரிக்க குடியரசு | பிராங் |
| 151. | மலாவி | குவாச்சா |
| 152. | மலேஷியா | ரிங்கிட் |
| 153. | மார்ஷல் தீவுகள் | டொலர் |
| 154. | மொரிடானியா | ஓகுயா |
| 155. | மாலி | பிராங்க் |
| 156. | மோல்டர் | மால்டியா |
| 157. | மோல்டோவா | லேவு |
| 158. | மாலைதீவுகள் | ருபியா |
| 159. | மாலிடோனியா | தினார் |
| 160. | மியான்மார் | கயாத் |
| 161. | மெக்ஸிக்கோ | புதிய பெஸோ |
| 162. | மைக்ரோனேசியா | டொலர் |
| 163. | மொராக்கோ | திர்ஹாம் |
| 164. | மொறிசியஸ் | ரூபாய் |
| 165. | மொனாக்கோ | பிரெஞ்ச் பிராங் |
| 166. | மொஸாம்பிக் | மொட்டிக்கல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 167. | யேமன் | றியால் |
| 168. | ருமேனியா | லியு |
| 169. | றுவான்டா | றுவாண்டா பிராங்க் |
| 170. | ரஷ்யா | றுபின் |
| 171. | லக்ஸம் பேர்க் | யூரோ |
| 172. | லட்வியா | லாட் |
| 173. | லாவோஸ் | கிப் |
| 174. | லிச்டெக்ஸ் டெயின் | சுவிஸ் பிராங்க் |
| 175. | லிதுவேனியா | லிடாங் |
| 176. | லிபியா | லிபியன்தினார் |
| 177. | லெசோதா | லோடி |
| 178. | லெபனான் | பவுண்ட் |
| 179. | லைபீரியா | லைபீரியன் டொலர் |
| 180. | வனாட்டு | வாது |
| 181. | வாடிகன் | யூரோ |
| 182. | வியட்னாம் | டோங் |
| 183. | வெனிசுலா | பொலிவுர் |
| 184. | ஜப்பான் | யென் |
| 185. | ஜமைக்கா | ஜமைக்கான் டொலர் |
| 186. | ஜோர்ஜியா | லாரீ |
| 187. | ஜிபூடி | ஜிபூடி பிராங்க் |
| 188. | ஜேர்மனி | யூரோ |
| 189. | ஜோர்தான் | ஜோத்தான் தினார் |
| 190. | ஸ்பெயின் | யூரோ |


க. கீதன்

தரம் - 12 Com

(2012)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கீட்டு நியமம் – 18

## பெறுமான தேய்வு

ஒரு நிலையான சொத்தினை தொடர்ச்சியாகப் பயன்படுத்துகின்ற போது அச் சொத்தில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான பெறுமதி வீழ்ச்சி பெறுமானத் தேய்வு எனப்படும்.

பெறுமானத் தேய்வு செய்தல் தொடர்பாக 82AS 18ல் பின்வருமாறு வரை விலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. தொட்டுணரக்கூடிய நிலையான சொத்தொன்றின் கிரயத்தில் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதியின் இருந்து அச் சொத்தின் இறுதிநிலை விற்பனைப் பெறுமதியை கழித்து வரும் பெறுமதியை அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்டு பொருளாதார ஆயட்கால அடிப்படையில் ஓர் ஒழுங்கு முறையான நியாயமான விதத்தில் பகிர்ந்தளிப்பதற்கான செயற்பாடு பெறுமானத் தேய்வு செய்தல் என கொள்ளப்படுகின்றது.

பெறுமான தேய்வு ஏற்படுவதற்கான காரணம்

1. பாவணை கிரயம்
   காலக்கழிவு அல்லது கால நட்டம்
   வழக்கிழப்பு அல்லது பழமையாதல்
   உற்பத்தி முறையில் ஏற்படும் மாற்றம்
   தீர்த்து விடல்
   கவனக் குறைவு

பெறுமான தேய்வு ஏற்பாடு செய்வதற்கான காரணங்கள்

1. உண்மையான இலாப நட்டத்தை அறிவதற்கு
2. சொத்தின் உண்மைப் பெறுமதியினை வெளிப்படுத்துவது
3. பயன் ஒழித்த சொற்கக்களை அகற்றி அவற்றினை மீளப்பிரதியீடு செய்வதற்கான நிதியை இலகட்டுத்தும் முகமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுமான தேய்வு அடையக் கூடிய சொத்துக்களிற்கும் பெறுமான தேய்வு செய்யப்படும் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்.

1. பெறுமான தேய்வானது சொத்தின் பயன்தகு காலங்களிற்கு நியாயமான அளவில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.
2. பெறுமான தேய்வு லாபநட்டக் கணக்கில் முழுமையான வரவு வைக்கப்பட வேண்டும்.
3. பெறுமான தேய்வு கணிக்கும் முறையில் நியாயமான காரணமின்றி மாற்றம் செய்ய கூடாது.
4. பெறுமான தேய்வு கணிக்கும் முறை, சொத்தின் வரை நிறுவனத்தின் பயன்பாடு என்பனவற்றிக்கேற்ப பொருத்தமாக அமைய வேண்டும்
5. எந்த நேரத்திலாவது பதிவழிக்கப்படாத சொத்தின் கிரயம் அதன் எதிர்பார்க்கப்படும் மீளப்பெற்ற தொகைக்கு அதிகமாக காணப்படுமானால் மீளப் பெற முடியாத அத்தொகை உடனடியாக வருமானங்களிற்கு எதிராக தாங்கல் செய்யப்படல் வேண்டும்.
6. சொத்தின் பெறுமதியில் நிரந்தரக் குறைவு ஏற்படின் அத்தொகை சொத்தின் பெறுமதியில் இருந்து குறைக்கப்படலாம். இவ்வாறு குறைக்கப்பட்ட தொகை தேவையென கருதப்படுமிடத்து திரும்பப் பதியப்படல் வேண்டும்.

J.ஜீவமலர்
தரம் - 12 Com
(2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமைத்துவத்தில் மனிதவளம்

நிறுவனமொன்றின் தனது நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் பயன்படுத்திய பல்வேறு வளங்களுள் முதன்மை மிக்க வளமாக விளங்குவது மனிதவளமே ஆகும். ஏனெனில் உலகளாவிய ரீதியிலே எந்தவொரு நிறுவனத்தின் தோற்றத்திற்கும் அவற்றின் செயற்பாட்டிற்கும் உயிர் நாடியாக விளங்குவது மனித சிந்தனைகளே. மேலும் நிறுவனம் ஒன்றில் மூலப்பொருட்கள் தொழில்நுட்பம், பணம், தகவல் எனப் பல்வேறு வளங்கள் காணப்பட்டாலும் இவ் வளங்கள் அனைத்தையம் நிறுவனத்தின் நோக்கத்திற்கேற்ற வகையில் மாற்றியமைக்கும் புரட்சிகர ஆளுமையானது மனித வளரத்துக்கேயுள்ள தனித்துவத் தன்மையாகும். எனினும் பௌதீக வளங்களுடன் ஒப்பிடும் போது ஒவ்வொரு மனிதவளமும் ஒவ்வொரு கணப்பொழுதிலும் வெவ்வேறுபட்ட நடத்தைக் கோலத்தைக் கொண்டிருப்பதனால் முகாமையினால் மிகவும் எச்சரிக்கையுடன் மதிநுட்பத்துடனும் கையாள வேண்டியச வால் மிக்க வளமாக மனிதவளம் காணப்படுகிறது.

இந்த வகையில் ஒரு முகாமையின் வெற்றியென்பது அது மனித வளங்களைக் கையாளும் ஆற்றல் மூலமே உறுதிப்படுத்தப்படும் அளவிற்கு முகாமைத்துவத்தில் வலிமை மிக்க வளமாக மனிதவளங்களே காணப்படுகின்றன இதன் பொருட்டு ஒவ்வொரு நிறுவனமும் பலமான ஊழியர்படையைக் கொண்டிருக்கும் போதே தனது நோக்கங்களை முழு வீச்சில் அடைந்து கொள்ள முடியும் அடைந்து கொள்ள முடியும். மாறாக நிறுவனத்தின் வினைத்திறனற்ற மனித வளக் கட்டமைப்புக் காணப்படுமாயின் நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளுவதில் பல்வேறு சபால்களை எதிர்கொள்ள வேண்டி இருப்பதோடு நிறுவனத்தின் ஆயட்காலமும் கேள்விக்குறியாகிவிடும் இந்த வகையில் முகாமைத்துவத்தின் வெற்றி தோல்வியினைத் தீர்மானிக்கும் முதன்மைச் சக்தியாக மனிதவளம் திகழ்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித வளத்தினை ஒரு நாடு அல்லது நிறுவனமொன்று எவ்வாறு கையாள வேண்டும் என்பதற்கு ஜப்பானிய மனித வளம் முகாமைத்துவம் தொடர்பான அணுகுமுறைகள் உலகிற்கே உதாரணமாக விளங்குகின்றன அதாவது இரண்டாம் உலகப் போரின் போது சாம்பல் மேடாகிப்போன ஜப்பான் அதிகளவு மூலவளங்களைக் கொண்டிராத போதிலும் மனித வளத்தையே பிராதன முதலீடாகக் கொண்டு உலக வல்லரசுக்கு மத்தியில் இலத்திரனியல் வல்லரசாக எழுந்து நிற்கும் ஜப்பானின் மனிதவளத்தினை கையாண்ட ஆற்றல் உலகிலுள்ள ஒவ்வொரு நாடுகளும் அல்லது நிறுவனங்களும் எவ்வாறு மனிதவளத்தினைப் பயன்படுத்தி வளர்ச்சியடைய முடியும் என்பதற்கு ஓர் சிறந்த வழிகாட்டியாக அமைகிறது.

சி. கிரிசாளினி

13Com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்னியக்க ரெலர் இயந்திரம் ATM (Automated Teller Machine) ABM (Automated Banking Machine)

இன்றைய நவீன இலத்திரனியல் யுகத்திலே ATM பாவனையானது வணிகத்துறைக்கும் மக்களுக்கும் கிடைத்த ஓர் பொக்கிஷமாகும். ATM என்பது வங்கியினால் வாடிக்கையாளருக்கு 24 மணித்தியாலய சேவையை வழங்குவதற்கு அறிமுகப்படுத்தப் பட்டிருக்கும் ஓர் கணணிமயப்படுத்தப்பட்ட இயந்திரமாகம். 1986 இலங்கையில் இது அறிமுகமானது இப்பொறி புழக்க பண முறையின் அங்கமாக மாறியுள்ளது.

இந்த இயந்திரத்தின் மூலமாக வாடிக்கையாளர்கள் பணத்தை வைப்பு செய்தல், பணத்தை மீளப் பெறுதல், பட்டியல் தொகைகளை செலுத்துதல் ஒரு கணக்கில் இருந்து மற்றொரு கணக்குக்கு பணத்தினை மாற்றுதல் போன்ற கருமத்தினை செய்ய முடியும் மற்றும் அபிவிருத்தி அடைந்த சில நாடுகளில் இதன் மூலம் பயணிகள் காசோலை, வைப்பு சான்று போன்ற சேவையினை பெற்றுக்கொள்ளலாம். வங்கிகளின் நடைமுறை கணக்கு, சேமிப்பு கணக்கு வைத்திருப்பவர்கள் ATM மூலம் சேவையை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம். ATM மூலமான கொடுக்கல் வாங்கல்களை செய்வதற்காக கணக்கு உரிமையார்களுக்கு விசேடமான இந்த முறை (Magnetical Striped card ) கொண்ட அட்டையும், தனிப்பட்ட இனம் காணும் இலக்கமும் PIN (Personal Identification Number) குறித்த வங்கியால் வழங்கப்படும் PIN என்பது வாடிக்கையாளரது அடையாள இலத்திரனியல் ஒப்பமாகும்.

ATM மூலம் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும்போது ரெல்லர் அட்டையைஉ ட்செலுத்தி PIN இலக்கத்தை குறித்தல் வேண்டும். அப்போது பொறி கணனி PIN இலத்திரன் திருத்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையை பகுப்பாய்வு செய்யும் அதில் ஏதாவது தவறுகள் காணப்பட்டால் அதனை திரையில் காட்டி நிராகரிக்கும் தவறுகள் இல்லை ஆயின் முன் செல்வதற்கான ஆலோசனை கணனி நிலையில் காட்டும் வாடிக்கையாளர் அந்த ஆலோசனை படி தனது தேவைகான கொடுக்கல் வாங்கல்களை பூர்த்தி செய்து கொள்ள முடியும். கொடுக்கல் வாங்கல் நிறைவேறியதும் கொடுக்கல் வாங்கல் அடங்கிய பத்திரத்தை பிறப்பிக்கும் பின் ரெல்லர் அட்டையை மீளக் கொடுக்கும்.

குறித்த வாடிக்கையாளன் தவிர வேறு நபர் இந்த அட்டையை பயன்படுத்தி ATM மூலமாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளமுடியாது. ஏதோ விதமாக வாடிக்கையாளருடைய அட்டையை களவெடுத்து அல்லது பொறுக்கி எடுத்து சரியான PIN இலக்கம் தெரியாமல் அந்த அட்டையை வைத்துக் கொள்ள பயன்படுத்த முயற்சித்தால் பொறி அந்த அட்டையை வைத்து கொள்ளும் மீள கொடுக்காது பின் அதன் உரிமையாளர் வங்கியில் பெற்று கொள்ளலாம்.

உண்மையிலே இப்போது ஒருவர் பணத்தினுடைய அதிக பாவனையால் அவரின் உயிருக்கு பாதுகாப்பற்ற நிலமை காணப்படும் நிலையில் இந்த பாதுகாப்பான வங்கி சேவையானது வணிக துறைக்கும் மக்களுக்கும் கிடைத்த மாபெரும் வெற்றி ஆகும்.

த. அரக்ஷன்,
தரம் 13 2011 com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதை

### வணிக மாணவன்.........

கம்பனி போன்ற பாடசாலையை
கல்வி என்னும் பங்குகளால்
வளர்ச்சி அடைய செய்வோம்
பங்குடமை போன்ற கூட்டு முயற்சி
பல்கலை கழகம் செல்ல வழிவகுக்கும்

பற்றுக்கள் எடுக்காமல் மூலதனம் விடும்
ஆசிரியர் வளம் அதிகமாய் உள்ளது
இலாப நோக்கற்ற கல்வி சேவையை
இனிமையாக பயின்று – எம்
பாடசாலை வளர உழைத்திடுவோம்.

கல்வி அது வாழ்வின் தேவை
கற்கும் முறை அது உன் விருப்பம்
வினைதிறன் மிக்க நூல்கள் மூலம்
விளைதிறன் மிக்க பொறுபேற்றே
செயற்திறனுடனே எடுத்துடுவோம்

தூர நோக்கை நிறைவேற்ற – மாணவனே
உன் உயர் நோக்கை அடைய முயற்சித்தல்
புழக்க மணம் போன்று செயற்படுவாய்
வர்த்தக சகட ஓட்டம் போல்
தடுமாறாதே கல்வியினை பாதிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமதி உண்டியலாக அறிவை தேடு
பொது ஒழுக்கமாக தீயதை ஒழி
நீண்ட கால கடனை போல் தேக்கிவைக்காதே
மூலதனமான கல்வியை முதலிடாமல்
ஐந்தொகை சமனின்றி நடுவீதியில் தத்தழிப்பாய்

முகாமையாளர் போன்ற ஆசிரியர்களின்
முகாமை திட்டத்தை வீணாக்காதே
ஐயக்கடன் போன்ற எதிர் பார்ப்பை
அறவிடமுடியா கடன் ஆக்காதே – மாணவனே
உறுதி கொள் சிறப்பால் கல்வி கற்று
பல்கலை கழகம் சென்ற பட்டம் வென்று
நிறுவனத்தின் உரிமையாளராய் வாழ்ந்திடு.

நன்றி.

த. லக்ஷன்
தரம் - 13 2011
Com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூலிக்கிரயம்

கூலிக்கிரயம் என்றால் உற்பத்தியில் ஈடுபட்ட or சேவை வழங்குவதில் ஈடுபட்ட ஆளணியினரின் பங்களிப்புக்காக செலுத்தப்பட்ட ஊதிய தொகையினை குறிக்கின்றது. இது தொட்டு உணரக்கூடிய உற்பத்தி வெளியீட்டுடனும், தொட்டு உணரமுடியாத உற்பத்தி வெளியீட்டு உடன் (சேவை வழங்கல்) தொடர்பு கொண்டதாக அமைகின்றது.

பொருட்கள் or சேவை உற்பத்தியில் பயன்படுத்திய மனித சக்தியினை உழைப்பு எனவும் சக்திக்கான கொடுப்பனவை சம்பளம் or கூலி எனவும் வரையறை செய்யலாம்.

**கூலிவழங்கலை தீர்மானிக்கும் காரணிகள்**

1. உழைப்பின் தேவையும் (கேள்வியும்) உழைப்பின் நிரம்பலும்
2. ஊழியரின் அல்லது உழைப்பின் உற்பத்தித்திறன்
3. ஊழியரின் பேரம்பேசும் ஆற்றல்
4. முயற்சியாளனின் கூலி வழங்கும் ஆற்றல்ஷ
5. வாழ்க்கைச் செலவு
6. அரசாங்கத்தின் கொள்கை
7. ஊழியர் தொடர்பான சட்டங்கள்

**கூலிக்கிரயத்தின் உள்ளடக்கம்**

இது கீழ்வரும் அடிப்படைகளில் கணிக்கப்பட்டு சேர்க்கப்பட்ட தொகையினை உள்ளடக்கியது எனலாம்.

1. நேரக் கூலிக்காக கொடுக்கப்பட்ட அடிப்படை ஊதியம்
2. மேலதிக நேர வேலைக்கான கொடுப்பனவுகள்
3. படிகள்
4. ஊழியர் சேமலாபநிதிய (தொழில் தருனர், பங்களிப்பு
5. ஊழியர் நம்பிக்கை நிதிய (தொழில் தருனர்) பங்களிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கூலிக் கணிப்பீடும் கூலிக் கொடுப்பனவு முறைகளும்**

தொழிலாளர் உழைப்பிற்கு ஈடாக ஊதியம் வழங்கப்படுகிறது. நிறுவனத்திற்கு நிறுவனம் தொழிலுக்கு தொழில் கூலி மதிப்பீட்டு முறையும் கூலிகொடுப்பனவு முறைகளும் வேறுபடுகின்றன.

கூலிக் கொடுப்பனவு முறைகளை பின்வருவனவற்றை இனங்காட்டலாம்.

1. நேரக் கூலிமுறை (Time Rate)
2. துண்டு கூலிமுறை (Piece Rate)
3. மிகை ஊதிய கூலி முறை (Bonus system)
4. ஊக்க திட்டம்
   - i. பணம் சார்ந்த ஊக்கத்திட்டம்
   - ii. பணம் சாரா ஊக்கத்திட்டம்

**1) நேரக்கூலி**

தொழிலாளர் தொழிலகங்களில் அவர்கள் வேலை செய்த நேரத்தின் அடிப்படையில் கூலி மதிப்பிட்டு வழங்கப்படும் முறை இதுவாகும். இம் திட்டத்தில் கீழ் நாள், வாரம், மாதம் என்ற அடிப்படைகளில் கூலி மதிப்பிட்டு கொடுப்பனவு செய்யப்படும்.

**கூலி வழங்கும் முறைகள்**

1. சாதாரண கூலி விகிதம்

   இம்முறையில் தொழிலாளி வேலைசெய்த நேரம் கணக்கிடப்பட்டு அதனடிப்படையில் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகின்றது.

   கூலி = வேலை செய்த நேரம் (மணித்தியாலம்)×மணிக்கூலி

   இம் முறையில் கூலி வழங்கப்படின் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவு ஊழியர்களுக்கு வழங்க நேரிடும்.

(உ – ம்) கணபதி என்பவர் நிறுவனம் ஒன்றில் நாளொன்றுக்கு 8 மணித்தியாலங்கள் படி வாரத்தில் 5 நாட்கள் பணிபுரிகின்றார் அவரின் மணித்தியால கூலி 50/= நாளாந்த, வாராந்த மாதாந்த ஊதியத்தைக் கணிக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நாளாந்த ஊதியம் 8 × 50 = ரூ 400/=

1. வாராந்த ஊதியம் 400 × 5 = ரூ 2000/=

2. மாதாந்த ஊதியம் 2000 × 4 = ரூ 8000/=

**சாதாரண கூலி விகிதக் கொடுப்பனவின் அனுகூலங்கள்**

1. இதனை விலக்கிக் கொள்வதும், நடைமுறைப்படுத்துவதும் இலகு
2. வேலையின் தரம் பாதிக்கப்படமாட்டாது.
3. தொழிலாளியின் வேலையின் தரம் துல்லியமாக மதிப்பிடமுடியாத வேலைகளுக்கு இம்முறை பொருத்தமுடையது ஆகும்.
4. இயந்திரங்கள் கருவிகள் பாதுகாப்பான முறையில் பயன்படுத்தலும்
5. நியம வெளியீட்டை கவனத்தில் கொள்ளாத முறை இதுவாகும்.

**உயர்ந்தளவில் நேர்க்கூலி விகிதம்**

இம்முறையில் தொழிலாளர்களுக்கு ஊக்கம் அளிப்பதுடன் தரமான பொருட்களாக அதிக வெளியீடுகளை பெறுவதாகும்.

இம் முறையில் உற்பத்தி வெளியீடு தொடர்பில் குறித்த ஒரு இலக்கு நிச்சயிக்கப்படுவதுடன் அதைத் தாண்டும் தொழிலாளிக்கு சமநேர விகிதத்திற்கு கூலியை விடவும் மேலதிக விகிதம் ஒன்றின் கீழ் ஒன்றின் கீழ் கூலிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் ராஜா, ரகு, பவன் ஆகியோர் தொடர்பான தகவல் வருமாறு:-

| | மணிகூலி (சாதாரண) | ஒரு மாதத்தில் வேலை செய்த மணித்தியாலங்கள் |
|---|---|---|
| ராஜா | 20 | 250 |
| ரகு | 40 | 230 |
| பவன் | 50 | 180 |

வேண்டப்படுவது

1. சமநேர கூலிவிகித அடிப்படையில் நிறுவனத்தினால் வழங்கப்பட வேண்டிய மொ. ஊதியம் கணிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மாதமாதம் 180 மணிக்கு மேல் வேலை செய்யும் மணித்தியாலத்திற்கும் ஊழியர்கள் சாதாரண நேரக் கூலியின் 150% ஊதியத்தை பெறுவார்கள் எனின் நிறுவனத்தால் வழங்கப்பட வேண்டிய மொ ஊதியத்தைக் கணிக்க?

**சமகூலி விகிதம்**

| | | |
|---|---|---|
| ராஜா | 250 × 20 | 5000 |
| ரகு | 230 × 40 | 9200 |
| பவன் | 180 × 50 | 9000 |
| மொ.ஊதியம் | | 23200 |

**உடர்ந்த அளவில் நேரக்கூலி**

| | | |
|---|---|---|
| ராஜா | 180 × 20 | 3600 |
| | 70 × 30 | 2100 |
| ரகு | 180 × 40 | 7200 |
| | 50 × 60 | 3000 |
| பவன் | 180 × 50 | 9000 |
| மொ.ஊதியம் | | 24900 |

**துண்டுக் கூலி முறை**

இம் முறையில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கூலி அவர்கள் செய்யும் வேலையின் அளவு or வேலையின் வேகம் or அவர்களின் உற்பத்தி வெளியீட்டின் எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறையில் தொழிலாளர் வேலைசெய்யும் நேரத்தின் அடிப்படையில் அன்றி தொழிலாளர்களினால் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு அலகுகளுக்குள்ளும் என கூலி நிர்ணயிக்கப்படுகிறது.

துண்டுக் கூலி நடைமுறைப்படுத்தப்படும் முறைகள்

1. சீரான துண்டுக்கூலி
2. உத்தரவாத நேரக்கூலியுடன் துண்டுக்கூலி
3. மாறும் துண்டுக் கூலிமுறை

***சீரானதுண்டுக்கூலி***

இந்த முறையில் ஓர் அலகு உற்பத்தி வெளியீட்டின் அடிப்படையில் கூலி நிர்ணயிக்கப்பட்டு இருக்கும். இந்த வகையில் தொழிலாளியினால் வெளியீடு செய்யப்பட்ட உற்பத்தி அலகுகளை நிர்ணயிக்கப்பட்ட ஓர் அலகுக்கான கூலியினால் பெருக்குவதன் மூலம் தொழிலாளியின் கூலி மதிப்பிடப்படும்.

கூலி = ஒரு அலகுக்கான கூலி × உற்பத்தி அலகுகள்

(eg) :- குமரன் என்னும் தொழிலாளி வாரம் ஒன்றில் 40மணி நேரம் 75 அலகுகள் உ/தி செய்தார் ஒரு மணித்தியாலத்திற்கான உத்தரவாத கூலி 20/= ஓர் அலகுக்கான துண்டுகூலி 10/= எனின் நேரக்கூலி அடிப்படையிலும் துண்டுக்கூலி அடிப்படையிலும் கூலியை மதிக்க.

1. நேரக்கூலி = ஒரு மணிக்கூலி × வேலை செய்ய மணித்தியாலம்

   = 20×40

   = 800/=

2. துண்டுக் கூலி = அலகொன்றிக்கான கூலி × உற்பத்தி செய்த அலகுகள்

   = 10 × 75

   = 750/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உத்தரவாத நேரக் கூலியுடன் துண்டுக்கூலி**

இவ் வகைக் கூலிக் கணிப்பீட்டில் ஆகக்குறைந்த நேரக் கூலிக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டு இருக்கும் இம்முறையில் துண்டுக்கூலி, நேரக்கூலி இரண்டிலும் எது கூடுதலாக இருக்கின்றதோ அதனையே தொழிலாளர் கூலியாகப் பெறுவார்.

(உ-ம்) தொழிலாளி ஒருவர் நாள் ஒன்றிற்கு ரூ 200ஐ கூலியாகப் பெறுவார். ஓர் அலகுக்கான துண்டுக் கூலியாக ரூ 15 ஆகும். இங்கு தொழிலாளி 10 அலகை உற்பத்தி செய்தால் அவர் பெறும் கூலி எவ்வளவு?

அவர் 15 அலகை உற்பத்தி செய்வார் ஆயின் அவர் பெறும் கூலி எவ்வளவு

10 அலகை உற்பத்தி செய்வார் ஆயின் பெறும் கூலி = 200/=

15 அலகை உற்பத்தி செய்வார் ஆயின் பெறும் கூலி = 15×15=225/=

**வேறுபடுத்தப்பட்ட துண்டுக்கூலி முறை**

இவ் வகைக் கணிப்பீட்டில் உற்பத்தி வெளியீட்டு அதிகரிப்பு அளவில் விகிதாசாரத்திற்கு ஏற்ப வழங்கப்படும் கூலியின் அளவும் வேறுபடும். இம்முறையில் முக்கிய நோக்கம் யாதெனில் திறமையான தொழிலாளர்களுக்கு தூண்டுதல் அளிப்பது ஆகும். இம் முறையில் தனிப்பட்ட தொழிலாளியின் உற்பத்தி வெளியீட்டை அதிகரிக்கக்கூடிய தொழில்களுக்கு மிகவும் பொருத்தமானது ஆகும்.

இதில் உள்ள பிரதான முறைகளாக

(Taylor) ரெயிலரின் வேறுபடுத்திய துண்டுக்கூலித்திட்டம்

(Merrik) மெறிக்கின் வேறுபடுத்திய துண்டுக்கூலித்திட்டம்

(Gantt) காண்டின் கடமையும் வெகுமதித்திட்டம்.

**மிகை ஊதியத் திட்டம்**

ஓர் சிறந்த கூலித் திட்டமானது தொழிலாளர்களை ஊக்குவித்து உற்பத்தி வெளியீட்டைப் பெருக்குவதற்கு தூண்டுகோலாக அமைதல் வேண்டும். இதன் காரணமாக இவ் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் உற்பத்திக்கு குறித்த காலம் நிர்ணயிக்கப்பட்டு அக்கால எல்லைக்குள் வேலை முடிக்கப்படுமாயின் சேமித்த நேரத்தைக் கருத்தில் கொண்டு கணிப்பிடப்பட்டு விசேட கொடுப்பனவானது கூலியுடன் சேர்த்து தொழிலாளர்களுக்கு வழங்கப்படும்.

மிகை ஊதியத் திட்டமானது மூன்று வழிகளில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

1. தனிநபர் மிகை ஊதியத் திட்டம்
2. குழுமுறை மிகை ஊதியத் திட்டம்
3. மறைமுக தொழிலாளர் மிகை ஊதியத்திட்டம்.

**தனிநபர் மிகை ஊதியத்திட்டம்**

இவ் தனிநபர் மிகைஊதியத் திட்டமானது

1. கல்வி முறை
2. கல்விவெயர்முறை
3. ரோவான் முறை
4. பாத்முறை

மேற்கூறப்பட்ட முறைகளில் நேர அடிப்படையிலான மிகை ஊதியத்திட்ட அடிப்படையில் முதல் மூன்று முறைகளும் துண்டுகூலி அடிப்படையிலான மிகை ஊதியத்திட்ட அடிப்படையில் 4வது முறையும் அமைகின்றது.

**கல்சிமுறை**

கல்சிமுறையில் நேரக் கூலியும், துண்டுக் கூலியையும் இணைந்த முறையில் கணிப்பிடப்படுகின்றது.

இம் முறையில் மிகையூதியம் ஆனது சேமித்த நேரத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு வேலைக்கும் அல்லது ஒவ்வொரு செயன்முறைக்கும் நியம நேரம் வழங்கப்படுகின்றது. தொழிலாளி ஒருவர் தமக்கு வழங்கப்பட்ட நியம நேரத்திலும் அதிகமான நேரத்தை வேலையை நிறைவு செய்யப்பயன்படுத்துவாராயின் அவருக்கு நேரக்கூலியைப் பெறுவார். அவர் வழங்கப்பட்ட நியம நேரத்திலும் குறைவான நேரத்தை செலவிடுவார் ஆயின் அவர் உண்மையாக செலவிட்ட நேரத்திற்கு நேரக்கூலியுடன் சேமித்த நேரத்தில் நேரக் கூலியில் 50% இனை மிகை ஊதியமாகப் பெறுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேமித்த நேரம் = அனுமதித்த நேரம் - வேலையை முடிப்பதற்கு எடுத்த நேரம்

மிகை ஊதியம் = 50% (சேமித்த நேரம் × நேரக்கூலி)

மொத்தக் கூலி – (வேலை செய்ய எடுத்த × நேரக்கூலி) + மிகை ஊதியம்

(உ-ம்) கீழே குறிப்பிடப்பட்ட தகவலில் இருந்து கல்சிமுறையில் மிகை ஊதியத்தை ஊழியர்களுக்கும் கணிக்க.

வேலைக்கு அனுமதித்த நேரம் = 6மணி

1மணித்தியாலத்திற்கான கூலி = 100/=

இந்நிபந்தனையில் கமல் 4 மணித்தியாலத்திலும் விமல் 2 மணித்தியாலத்திலும் நிமல் 7 மணித்தியாலத்திலும் வேலையை முடித்தனர்.

கமலின் கூலி = (வேலைசெய்ய எடுத்த×நேரக்கூலி) + மிகை ஊதிய நேரம்

$$= (4\times100) \times \frac{50}{100} \times (6 - 4) \times100$$

$$= 400 + 100$$

1 மணி கூலி $= \left(\frac{500}{4} = 125.00\right)$

விமலின் கூலி $= (2 \times 100) + \frac{50}{100} (4 \times 100)$

$$= 200 + 200$$

$$= 6400$$

1 மணி கூலி $= \frac{400}{2} = 200$

நிமல் $= (6 \times 100)$

= 600.00 வை கூலியாக பெறுபவர்

1 மணிக்கு $= \frac{600}{7} = 85.71$

**கல்சி முறை அனுகூலம்**

1. இம்முறையில் நேரக்கூலிக்கு உத்தரவாதம் வழங்கப்படுவதனால் ஊழியர் பாதுகாப்பு உண்மையைப் பெறுவார்
2. திறமை உடைய தொழிலாளியின் சராசரி வருமானம் அதிகம் இதனால் இவர்கள் தூண்டப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கணிப்பிடுவது இலகு (மிகை ஊதியம்)
4. உற்பத்தி அதிகரிப்பில் தொழிலாளர்களும் தொழில் வழங்குபவர்களும் நன்மைபெறுவர்.

**பிரதி கூலங்கள்**

தொழிலாளர் தமது திறமையில் 50% இற்கே ஊதியம் பெறுவர் இது தொழிலாளர்களுக்கு மனநிறைவைத் தராது.

**கல்சிவெயர் முறை**

கல்சி வெயர் முறையில் சேமிக்கப்பட்ட காலத்தில் 30% மிகை ஊதியமாக வழங்கப்படும்.

மிகை ஊதியம் = 30% (சேமித்த நேரம் × நேரக்கூலி)

மொத்தக் கூலி = (வேலை செய்ய எடுத்த நேரம் × நேரக்கூலி) + மிகை ஊதியம்

Note:- இம் முறையில் சேமித்த நேரத்தில் $33\frac{1}{3}\%$ மிகை ஊதியமாக வழங்குதல்

ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது என்பதை நாம் நினைவில் கொள்ளல் வேண்டும்.

உ-ம்:- ஓர் நிறுவனத்தில் பணிபுரியும் ஓர் ஊழியன் தொடர்பான தகவல்கள் வருமாறு:-

வேலைக்கு அனுமதிக்கப்பட்ட (நியம) நேரம் = 20மணித்தியாலம்

1 மணிக் கூலி = 25.00

வேலையை முடிக்க எடுத்த நேரம் 12 மணி எனின் கல்சிவெயர்முறையில் மிகை ஊதியம், மொத்த ஊதியம் என்பவற்றைக் கணிக்க?

மிகை ஊதியம் $= \frac{30}{100}$ (செமித்த நேரம் × மணிக்கூலி)

$$= \frac{30}{100}(8 \times 25)$$

$$= \frac{30}{100} \times 200$$

$$= 60.00$$

மொத்த ஊதியம் = (12 × 25)+60 = 360/=



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**றோவான் முறை**

இம் முறையில் கல்சி முறையைப் போன்று ஒவ்வொரு செயன்முறைக்கும் or வேலைக்கும் நியம நேரம் நிர்ணயிக்கப்படுகின்றது எனினும் மிகை ஊதிய கணிப்பீடு ஆனது றோவான் முறையில் சேமித்த நேரத்திற்கும் நியம நேரத்திற்கும் இடையிலான விகிதத்தை நேரக் கூலியால் பெருக்குவதன் மூலம் மதிப்பிடப்படும்.

$$\text{மிகை ஊதியம்} \quad \frac{\text{சேமித்த நேரம்}}{\text{நியம நேரம்}} \times \text{நேரக் கூலி}$$

நேரக் கூலி = வேலையை முடிக்க எடுத்த நேரம் × மணிக் கூலி

$$\text{மொத்தக் கூலி} = \left(\text{நேரக் கூலி} + \frac{\text{சேமித்த நேரம்}}{\text{நியம நேரம்}} \times \text{நேரக்கூலி}\right)$$

ராஜ் என்ற வியாபாரி வேலையை செய்து முடிக்க ஒதுக்கிய நேரம் 140மணி ஆனால் வேலையை முடிக்க சம்பத் எடுத்த நேரம் 110 மணி 1 மணித்தியாலத்திற்கான நிர்ணயிக்கப்பட்ட கூலி 60/= எனின் றோவான் முறையில் சம்பத்தின் கூலியை மதிப்பிடுக.

$$\text{மிகை ஊதியம்} = \frac{30}{140} \times (110 \times 60)$$

$$= \frac{3}{14} \times 6600$$

$$= 1414.3$$

நேரக் கூலி = 6600.00

மொ. கூலி = 6600 + 1414.3

= 80143.3.00

**பாத்சு முறை**

இம் முறை வேலை பழகுவோருக்கும் வேலையில் புதிதாகச் சேர்ந்தோருக்கும் திறனற்ற தொழிலாளருக்கும் தூண்டுதல் அளிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட மிகை ஊதியத் திட்டம் இதுவாகும். இது துண்டுக்கூலி அடிப்படையில் அமைந்த திட்டமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொ.கூலி = மணித்தியாலத்திற்கான $\sqrt{\text{கூலி} \times \text{நியமமணி} \times \text{செலவழிந்த}}$ காலம்

உ-ம் :- மணித்தியாலம் ஒன்றிக்கு அனுமதித்த கூலி = 5.00

அனுமதித்த வேலை நேரம் = 8மணி

காதர் குறித்த வேலையை முடிக்க 10 மணித்தியாலம் எடுத்தார் எனின் அவர் பெறக் கூடிய சம்பளம் எவ்வளவு?

காதர் $= 5\times\sqrt{8\times10}$

$= 5\times\sqrt{80}$

$= 5\times8.99$

$= 44.95 = 45/=$

**குழு மிகை ஊதியத்திட்டம்**

இம்முறையில் தொழிலாளர்கள் குழுவாக இணைந்து உற்பத்தியில் ஈடுபடும் போது மிகை ஊதியம் கணக்கிடப்படுகின்றது குழுமுறையில் மதிப்பிடப்பட்ட மிகை ஊதியமானது குழு முறையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட அடிப்படையில் அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது. தனிப்பட்ட தொழிலாளர்கள் உற்பத்தி வெளியீட்டை மதிப்பிடப்படாத இடத்து இம்முறை செயற்படுத்தப்படுகின்றது. இத்திட்டமானது குழு உறுப்பினர்களிடையே நட்பையும் குழுமனப் பாங்கையும் வளர்க்கின்றது. இத்துடன் திறமையான தொழிலாளர்கள் திறமைகுறைவான தொழிலாளர்களுக்கு பயிற்சியளிக்கவும் இவ் திட்டம் ஊக்கமளிக்கிறது.

**மறைமுக தொழிலாளர்களுக்கான மிகை ஊதியத் திட்டம்**

சில தொழிலாளர்கள் பிரிவின் உற்பத்தியில் வெளியீட்டை அளவிடுவது கடினமாகலாம் உ-ம் பராமரிப்பு தொழிலாளர்கள், வாயிற்காப்பாளர், பண்டகசாலைக் காப்பாளர், இத்தகைய தொழிலாளர்களை மிகை ஊதியத்திட்டத்தில் இருந்து நீக்குவது அவர்களது மனோநிலையில் பாதிப்பை ஏற்படுத்திவிடும் ஆதலால் உற்பத்தியுடன் நேரடியாகத் தொடர்புடைய தொழிலாளர்களுடன் இவர்களை இணைத்து அவர்கள் வெளியீட்டின் அடிப்படையில் மிகை ஊதியம் வழங்கப்படுகின்றது.

Mr.S.சுதாகரன் B.Com (F. Acc-Apl)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச நாணய நிதியம் பற்றிய ஒரு நோக்கு

**அறிமுகம் :-**

தோற்றத்தை நோக்குமிடத்து இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து சர்வதேச சமூகத்தினுள் சக வாழ்வை ஏற்படுத்தல் மற்றும் உலகப் பொருளாதார மீள் உயிர்ப்பைக் கட்டியெழுப்புதல் ஆகிய நோக்கத்தின் அடிப்படையில் 1944 ஜீலை மாதத்தில் ஐக்கிய அமெரிக்காவின் நியூஹெபஷயர் மாநிலத்தின் பிரட்டன்வூட் நகரத்தில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் நாணய மற்றும் நிதியியல் மாநாடு இவற்றில் முக்கியத்துவம் வகிக்கின்றது. இங்கு உலகவங்கி (International Bank for reconstrunction and Development) சர்வதேச நாணயநிதியம் (International Monitory fund) உருவாக வழிவகுக்கப்பட்டது. இவ்விரு நிறுவனங்களும் 1945ஆம் ஆண்டு உருவாகியது.

**சர்வதேச நாணய நிதியத்தின் நோக்கங்கள்**

1. சாவதேச நாணய தொழிற்பாடுகளின் போது மதியுரைச் சேவைகளையும், ஒத்துழைப்பையும் வழங்குகின்ற நிலையானதொரு நிறுவனமாக இன்று சர்வதேச நாணய தொடர்புகளை வளர்த்தல்.

2. அங்கத்துவ நாடுகளுக்கிடையே ஒழுங்கான விதத்தில் செலாவணிப் பரிமாற்றத் தொழிற்பாடுகளைப் பேணி வருதல்.

3. சர்வதேச வர்த்தக தொழிற்பாடுகளை சமநிலையுடன் விஸ்தரிப்பதற்கான வசதிகளை வழங்குதன் மூலம் தொழில் நிலையையும் உண்மை வருமானத்தையும் மேம்படுத்துதல்.

4. அங்கத்துவ நாடுகளுக்கிடையில் நடைபெறுகின்ற நடைமுறைப் பரிமாற்றங்களின் போது பல்துறைக் கொடுப்பனவு முறையை நிறுவுவதற்கு உதவியளித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சர்வதேச சுபீட்சத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தாத நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தனது சென்மதி நிலுவையின் குறைச் சீராக்கங்களை திருத்திக்கொள்ள வாய்ப்பளித்தல்.

6. அங்கத்துவ நாடுகளுக்கிடையே உருவாகியதை சர்வதேச சென்மதிநிலுவைச் சமமின்மைகளை மிகக் குறுகிய காலத்தினுள் குறைத்துக் கொள்ளல்.

**சர்வதேச நாணய நிதியத்தின் பணிகள்.**

1. நாடுகளில் ஏதேனும் ஒரு அபாய நிலைமை காணக்கூடியதாக இருப்பின் தேசிய பொருளாதாரத்தையும் சர்வதேச பொருளாதாரத்தையும் உரிய விதத்தில் பேணிவரும் பொருட்டு அவசியமான மதியுரைகளை வழங்குதல்.

2. நிறுவனத்தின் 50 வருடகால அனுபவத்தைப் பயன்படுத்தி தனது அங்கத்துவ நாடுகளின் பொருளாதாரக் கொள்கைகளை தயாரித்தது அவற்றின் தரத்தைப் பேணி வருவதற்குமான மதியுரைகளை வழங்குதல்.

3. திடீர் நிதியியல் பிரச்சினைகளின் போது தற்காலிக கடன்களை அங்கத்துவ நாடுகளுக்கு வழங்குதலும் நீண்டகால பொருளாதார பிரச்சினைகளுக்கு நிதியியல் வசதிகளை வழங்குதல்.

4. சிறந்த பண்புகளைக் கொண்டதாக வழங்கி மற்றும் நிதியியல் தொழிற்பாடுகளுக்கான சட்ட ஒழுங்கு முறைகளைப் பேணிவருவதற்கு மதியுரைகளை வழங்குதல்.

5. அங்கத்துவ நாடுகளுக்கிடையே அரசநிதி, வெளிநாட்டு நிதி, தேசிய கணக்குகள் போன்ற துறைகள் தர நியமங்களைத் தயாரித்தலும் அதன் சென்ற தகவல்களை வெளியிடலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அங்கத்துவ நாடுகளுக்குத் தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குதலும் அரசாங்கத்தினதும் மத்திய வளர்ச்சியினதும் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தலும்.

**முடிவுரை**

இன்று உலகின் பலம் பொருந்திய பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகள் உட்பட 184 அங்கத்துவ நாடுகளைக் கொண்டுள்ள சர்வதேச நாணய நிதியமானது உலக பொருளாதாரத்தில் கூடுதலான செல்வாக்கைச் செலுத்தக் கூடியதான நிறுவனமாக உள்ளது.

Mr.K.Mahinthan BA(Hons) Eco.Spe.Dip in Edu

Teacher



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## நன்றியுரை

எமது பாடசாலை வணிக மன்றத்தின் கன்னி முயற்சியாக வெளிவரும் இவ் வணிகவியலாளன் நூலானது அதிபரின் அறிவுரைக்கேற்ப ஆரம்பிக்கப்பட்டு இன்று வெளியிடப்படுகின்றது. இந்த வகையில் அதிபருக்கு முதலில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அடுத்து பல ஆலோசனைகளை வழங்கிய எமது பாடசாலை ஆசிரியர்களுக்கும், ஆக்கங்களை வழங்கிய ஆசிரியர்களுக்கும்,மாணவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் இந்நூலினை வடிவமைத்த நூலாக்க குழுவிற்கும், அழகுற அச்சிட்டு வெளியிட்ட நியூ கோல்டன் ஸ்ரார் நிறுவனத்திற்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

செல்வி.ச.சங்கீதா
செயலாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வணிக மன்றம் -2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**2011 ம் ஆண்டு நடைபெற்ற கூட்டுறவு தினப்போட்டியில்
மாகாண மட்டத்தில் முதலிடம்பெற்று
தேசிய மட்டத்தில் பங்குபற்றிய
மாணவர்கள் , அதிபர் மற்றும் பொறுப்பாசிரியருடன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org